DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com — Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1447 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday December 29, 2023

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

## யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, மல்லாவி அரச மருத்துவமனை ஆகியவற்றுக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள், இதர மருத்துவ உபகரணங்களை வழங்கிய கனடா கணேசன் சுகுமார் — திரு. மகாதேவன்





அண்மையில் கனடா வாழ் தொழிலதிபர் கணேசன் சுகுமார் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. மகாதேவன் **(Hot Breads)** ஆகியோர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் மல்லாவி அரச மருத்துவமனை ஆகியவற்றுக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் மற்றும் இதர மருத்துவ உபகரணங்களை வழங்கிய வைபவங்கள் சிறப்பாக வெவ்வேறாக நடைபெற்றன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற இயந்திரங்கள் கையளிக்கும் வைபவத்தில் வைத்தியசாலையின் பணிப்பாளரும் வடமாகாண சுகாதாரப் பிரிவு பணிப்பாளருமான வைத்தியர் சத்தியமூர்த்தி மற்றும் கண்வைத்திய நிபுணர் வைத்தியர் மலரவன் மற்றும் தாதிமார்கள் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கே காணப்படும் படங்களில் கனடா வாழ் தொழிலதிபர் கணேசன் சுகுமார் அவர்கள் வைத்தியசாலை மண்டபத்தில் அவர் உரையாற்றுவதையும் காணலாம். மல்லாவி வைத்தியசாலையில் இடம்பெற்ற கையளிப்பு வைபவத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு மகாதேவன் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களோடு நிற்பதையும் காணலாம்.

BIG Billyard Insurance Group
STOUFFVILLE
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy



## அனைவர் மீதும் அன்பு செலுத்திய அன்பர் அருட்கவி ஞானகணேசன் அவர்கள் மறைந்தார்

அனைவர் மீதும் அன்பு செலுத்திய அன்பர் அருட்கவி ஞானகணேசன் அவர்கள் மறைந்தார் என்னும் கொடிதான செய்தி 27, 2023 காலை எம் செவிகளுக்குள் புகுந்து பின்னர் இதயத்தை தாக்கிநின்றது. கூடி நின்று அழத் தொடங்கினோம். இவ்வாண்டு அக்டோபர் இறுதிப்பகுதியிலிருந்து தன்னைத் தாக்கிய நோயிலிருந்து மீள முடியாமல் போராடிக்கொண்டிருந்த அவர் இறைவனடி சேர்ந்தார்.

இலங்கையில் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய காலத்தில் தாயகத்தில் ஏற்பட்ட நிலைமையின் காரணமாக கனடாவிற்கு புலம்பெயர்ந்து கனடாவில் குடிசார் பொறியியல் துறையில் புலமை பெற்று திட்ட ஒருங்கமைப்பாளராக குடிசார் பொறியியல் ஆலோசக நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய பின்னர் கடந்த ஆண்டளவில் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

வரசித்தி விநாயகர் ஆலயத்தில் முக்கிய தொண்டராக விளங்கிய இவர் இயல்பாகவே பாடும் திறனும், கலை ஆர்வமும் கொண்ட அவர் வரசித்தி விநாயகருக்கான பாடல்களை எழுதி இசைத்தட்டாகவும் வெளியிட்டார். வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்களால் அருட்கவி என்ற பட்டம் வழங்கப்பெற்றார். (தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

## ஆண்டாண்டு காலமாக விவசாயிகள் — தொழிலாளர்கள் மீது அக்கறையின்றி செயற்படும் ஆட்சியாளர்கள்

உலகின் பல நாடுகளிலும் எண்ணிக்கையில் அதிகளவில் வாழும் விவசாயிகள் மற்றும் தொழிலாளிகள் ஆகியோரும் ஆங்காங்கே பணியாற்றும் அரசின் உயர் அதிகாரிகளும் அக்களையின் செயற்படுவதை நாம் இதற்கு முன்னர் பல தடவைகளில் எமது 'கதிரோட்டம்' பகுதியில்
சுட்டிக்காட்டியிருந்தோம். குறிப்பாக இந்தியாவிலும் இலங்கையிலும் மீனவர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை பற்றியோ அன்றி அவர்கள் செய்யும் தொழில் பற்றியோ எவ்வித அக்கறையும் இன்றி தங்கள் ஆட்சியை நடத்திவரும் ஆட்சியாளர்கள் தமது சகாக்களின் நலன்கள் கருதி தரமற்ற பொருட்களை இறக்குமதி செய்யும் அளவிற்கு எவ்வித தயக்கமுமின்றி செயற்பட்டு வருகின்றார்கள். பல சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் உரிமங்களைக் கூட அரசியல்வாதிகளோ அன்றி அவர்களுக்கு சார்பான கையாட்களோ பெற்று அதிக இலாபம் பெறும் வகையில் டிதரமற்ற பொருட்களை இறக்குமதி செய்து தங்களுக்கு வாக்களித்த தொழிலாளிகள் விவசாயிகள் மற்றும் மீனவச் சமூகத்தினர் ஆகியோரை ஏமாற்றி வருகின்றனர்.
இவ்வாறு விவசாயிகள் ஏமாற்றப்பட்ட பல சம்பவங்கள் இந்தியாவின் பல பல மாநிலங்களில் இடம்பெற்றுள்ளன. இதனால் அங்கு சக்தி வாய்ந்த விவசாயிக-ளின் போராட்டங்கள் இடம்பெற்றன. இந்த போராட்டங்களை அடக்குவதற்கு நரேந்திரமோடியின் மத்திய அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்ததனால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் கொல்லப்பட்டனர். இதைப் போன்ற தமிழ் நாட்டிலும் விவசாயிகளுக்கு சாதகமாக அதிமுக அரசோ அன்றி தற்போதைய திமுக அரசோ செயற்படவில்லை. இதனால் அங்கு தொடர்ச்சியாக விவசாயிகள் போராடிக் கொண்டே வருகின்றார்கள்.
இவ்வாறான சம்பவங்கள் தற்போது எமது தாய் மண்ணாம் வடக்கு கிழக்கிலும் இடம்பெற்று வருகின்றன என்பதை செய்திகள் வாயிலாக
அறிகின்றோம். அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்காக வெளிநாட்டிலிருந்து முதலாளிகளால் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கில் பற்றீரியா தொற்று ஏற்பட்டமை தொடர்பில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் வட மாகாண பிரதி பணிப்பாளரிடம், ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கேள்விகளை முன்வைத்தார். எவ்வித தரச் சான்றிதழும் இன்றி குப்பிளான் களஞ்சியசாலைக்கு விதை உருளை கிழங்குகள் எவ்வாறு கொண்டுவரப்பட்டன, இதற்கான அனுமதி-யை வழங்கியது யார்?, தற்போது அவற்றை அழிப்பதற்குரிய செலவுகள், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான மாற்று செயற்பாடுகள் போன்ற பல விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச கூட்டத்தில் கேள்விகளை முன்வைத்தார்.
இந்நிலையில் தரமற்ற விதை உருளைகிழங்கு இறக்குமதியில் மோசடிகள் இடம்பெற்றிருக்க கூடும் என்பதால் அது குறித்து விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் வலியுறுத்தினார். இந்த தீர்மானத்திற்கு இணைத்தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தாவும் இணக்கம் தெரிவித்தார்.
எனினும் விவசாயிகளையும் தொழிலாளர்களை பாதிக்கும் இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக அரச அதிகாரியான ஆளு-னரும் அரசியல்வாதியான அமைச்சரும் அடிக்கடி வாக்குறுதிகளை வழங்கினாலும் அவை நினைவேற்றப்படுவதில்லை என்ற உண்மையான விளைவுகளே அங்கு விவசாயிகளுக்கு கிட்டி வருகின்றன. இதைப்போன்றே யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மீனவச் சமூகத்தினர் மீதும் தொடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் அனைவரதும் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுவதை அரசியல்வாதிகளோ அரசின் உயர் அதிகாரிகளோ. கவனிப்பதாக இல்லை.

## தரமற்ற விதை உருளைக்கிழங்கு இறக்குமதி தொடர்பில் விசாரணை அவசியம்

### — யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெரிவிப்பு

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற விதை உருளை கிழங்கு தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார். யாழ். மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போதே ஆளுநர் இதனை குறிப்பிட்டார். யாழ் மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா, கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோரின் தலைமையில், மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் வியாழனன்று நடைபெற்றது.
யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள டெங்கு அபாய நிலை, கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள், அபிவிருத்தி திட்டங்கள், மாவட்டத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது. யாழ் மாவட்ட விவசாயிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கில் பற்றீரியா தொற்று ஏற்பட்டமை தொடர்பில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் வட மாகாண பிரதி பணிப்பாளரிடம்,
கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கேள்விகளை முன்வைத்தார். எவ்வித தரச் சான்றிதழும் இன்றி குப்பிளான் களஞ்சியசாலைக்கு விதை உருளை கிழங்குகள் எவ்வாறு கொண்டுவரப்பட்டன, இதற்கான அனுமதியை வழங்கியது யார்?, தற்போது அவற்றை அழிப்பதற்குரிய செலவுகள், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான மாற்று செயற்பாடுகள் போன்ற பல விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் கேள்விகளை முன்வைத்தார். இந்நிலையில் விதை உருளைகிழங்கு இறக்குமதியில் மோசடிகள் இடம்பெற்றிருக்க கூடும் என்பதால் அது குறித்து விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் வலியுறுத்தினார். இந்த தீர்மானத்திற்கு இணைத்தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தாவும் இணக்கம் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள பாலியாறு திட்டம் தொடர்பிலும் இன்று தெளிவுபடுத்தப்பட்டது. அத்துடன் யாழ் மாவட்ட கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றமை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவோரிடம் அறவிடப்படும் தண்டப் பணத்தை, மீனவர்களின் நலன்புரி செயற்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும் என, அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவர், அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா இதன்போது அதிகாரிகளுக்கு தெரிவித்தார். அத்துடன் எதிர்வரும் 04 ஆம் திகதி ஜனாதிபதி வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ளமை தொடர்பிலும் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா அபிவிருத்திக்குழு கூட்டத்தின் போது தெளிவுப்படுத்தினார்.

## அனைவர் மீதும் அன்பு செலுத்திய அன்பர் அருட்கவி ஞானகணேசன் அவர்கள் மறைந்தார்

(முன் பக்கத் தொடர்ச்சி)
கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தில் இணைந்து அமரர் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர், கவிநாயகர் வி.கந்தவனம் ஆகியோர் நடத்திய யாப்பிலக்கண வகுப்பில் மாணவராகச் சேர்ந்து செவ்வனே கற்று எட்டுக் மரபுக்கவிஞர்களில் ஒரு-வரராக சித்தியடைந்து சிறந்த பவனி வந்தார். தனது இரண்டு ஆசான்களிடமும் அளவற்ற குருபக்தி கொண்டவராக விளங்கிய அருட்கவி அவர்கள் தன்னோடு யாப்பிலக்கணம் பயின்ற கவிஞர்களுடன் நல்ல நட்புடன் பழகி வந்தார்.
சந்தமுடன் பாடல் எழுதுவதிலும், கும்மிப் பாடல்களை விரும்பி எழுதுவதிலும், அரங்கம் மகிழ சந்தத்துடன் படிப்பதிலும் வல்லவராக விளங்கினார். எல்லோரையும் வாழ்த்தி வாழ்த்துப்பாக்கள் எழுதுதல், இசைப்பாடல்களை எழுதி வெளியிடல் , போன்ற செயற்பாடுகளில் அதிக ஆர்வம் கொண்டு செயற்பட்டார். கடந்த வருடம் தனது கவிதை நூலினை தமிழகத்திலும் வெளியிட்டு பல தமிழகக் கவிஞர்களின் பாராட்டினையும் பெற்றார் அத்துடன். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் நிறுவப்பெற்று அதன் இரண்டாவது தலைவராகப் பணியேற்று சிறப்பாகத் தனது கடமைகளைச் செய்து வந்தார். அதன்பின்பும் இறுதிவரை பல பதவிகளை வகித்துப் பணியாற்றி வந்தார்.
உலகக் கவியரங்குக் குழுவிலும் இணைந்து உலகச் சாதனை நிகழ்வுகளிலும், கவியரங்குகளிலும் பங்கேற்று வந்தார். அத்துடன் வானொலியில் பல கவிதை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தில் இணைந்து பொருளாளர் , நிர்வாகசபை உறுப்பினர் போன்ற பதவிகளை வகித்துச் சிறப்பாகப் பணியாற்றினார். கடந்த வருடம் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் இவருக்கு பாவலர் விருதும் வழங்கி மதிப்பளித்தது.
ஆன்மீகத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டவராகவும், சிறந்த கவிஞராகவும், நூ-லாசிரியராகவும், கலைஞராகவும் பாடலாசிரியராகவும், சமூக சேவையாளராகவும் விளங்கிய அருட்கவி ஞானகணேசன் அவர்கள் அனைவருடனும் அன்புடன் பழகி வந்தார். தற்போது அந்த இனியவர் எம்முடன் இல்லை என்ற நிலையினை நம்ப முடியாதவர்களாகத் தவிக்கின்றோம்.

அமரர் அருட்கவி ஞானகணேசன் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
இவ்வாறு கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் சார்பில் அதன் தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

Commercial Cleaner Wanted
Hiring Commercial Cleaner
Area: Barrie Ont.

Full time 7am to 3pm
Monday to Friday
Industrial / office area cleaner

Call: 647-640-4050

For All your Renovation Needs!

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை தொடங்கி வைக்கப்பட்டது



கொழும்பு மாவட்டத்தில் வெள்ளவத்தையில் அமைந்துள்ள சைவ மங்கையர் வித்தியாலயத்தில், டிசம்பர் 17ம் திகதி திறன் வகுப்பறையானது, பௌதிகவியல் ஆய்வுக் கூடத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த பாடசாலையில் க.பொ.த உயர் தரக் கல்வி கற்கும் மாணவர்களின் நவீன கற்றல் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக, இந்த திறன் வகுப்பறையானது தொடங்கி வைக்கப்பட்டது.

Ratnam Foundation, UK மற்றும் திரு. வ. ஹரிச்சந்திரன் (விசன்ஸ், அமெரிக்கா) அவர்களின் இணைந்த நிதிப் பங்களிப்பில் வழங்கப்பட்ட இந்த திறன் வகுப்பறையை, விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ட் நிறுவனம் வைபவ ரீதியாக தொடங்கி வைத்தது. சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி. அருந்ததி ராஜவிஜயன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்,





விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு. ந.தெய்வேந்திரராஜா மற்றும் விசன்ஸ் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. அ. மயூரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து, திறன் வகுப்பறையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

சைவ மங்கையர் வித்தியாலய உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றலுடன் நடைபெற்ற இந்நிகழ்வில், அப்புத்தளை வின்ரோஸ் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் பணிப்பாளர் செல்வி. ரேகா கொட்வின் பால் மற்றும் விசன்ஸ் நிறுவனத்தின் சார்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்திருந்த நான்கு பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நான்கு முன்மாதிரித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

திறன் வகுப்பறை மூலம் க.பொ.த உயர்தர மற்றும் சாதாரண தர மாணவர்கள் திறன் தொழில்நுட்பத்துடன் நவீன முறையில் கற்றல் செயல்பாடுகளில் வெவ்வேறு நேர சூசி அடிப்படையில் நாளாந்தம் பயன்பெறுவர் என்று தெரிவித்த பாடசாலை அதிபர், இந்த திறன் வகுப்பறையை வழங்கிய இரட்ணம் பவுண்டேஷன் (இலண்டன்) மற்றும் திரு. வ. ஹரிச்சந்திரன் (விசன்ஸ், அமெரிக்கா) அவர்களுக்கும், ஆரம்பித்து வைத்த விசன்ஸ் நிறுவனத்திற்கும் தனது நன்றியை தெரிவித்தார்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் புத்தர் சிலை?




புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் அதே பிரதேசத்தை சேர்ந்த கபிரியேல் பிள்ளை ராசன் என்பவர் ஆழிப்பேரலையில் உயிரிழந்த மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளினதும் நினைவாக குறித்தவளைவை அமைப்பதற்கு உதவி புரிந்துள்ளார்.

காலை பாடசாலை அதிபர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் அருட்தந்தை அமல்ராஜ், முள்ளியான் கிராம சேவகர் கி. சுபகுமார் வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் சிறி ராமச்சந்திரன், சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நுழைவாயிலை நாடா வெட்டி கபிரியேல்பிள்ளை ராசன் அவர்களின் தாயார் திறந்துவைத்ததோடு தாயாருக்கு பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அதிபர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





# கட்டைக்காட்டில் 19 ஆவது சுனாமி நினைவேந்தல் நிகழ்வு!



வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் 19 ஆவது சுனாமி நினைவேந்தல் நிகழ்வு உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கட்டைக்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவர் செ.செபஸ்ரியன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் அருட்தந்தை அமல்ராஜ், மற்றும் முள்ளியான் கிராம சேவையாளர் கி. சுபகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஈகைச்சுடரினை உயிரிழந்த உறவுகளின் உறவினர் ஒருவர் ஏற்றிவைக்க நினைவுத் தூபிக்கான மலர் மாலையும் அணிவிக்கப்பட்டது.



குறித்த நிகழ்வில் தங்களது உறவுகளை இழந்த நூற்றுக்கணக்கான உறவுகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# மன்னாரில் இடம்பெற்ற சுனாமி பேரலையில் உயிரிழந்தவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல்



- மன்னார் நிருபர் (26-12-2023)

சுனாமி பேரலையில் உயிரிழந்தவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு (26-12-2023) செவ்வாய்க்கிழமை அன்று மன்னார் பிரதான பாலத்தடியில் முன்னாள் மன்னார் பிரதேச சபை உறுப்பினர் லுஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் இடம்பெற்றது.

உயிரிழந்தவர்களை நினைவு கூறும் வகையில் (26-12-2023) செவ்வாய்க்கிழமை அன்று காலை 9:25 குறித்த கடற்கரை பகுதியில் தீபம் ஏற்றி மலர் தூவி உயிர் நீத்தவர்களுக்காக உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

மெசிடோ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ சமூக செயற்பாட்டாளர் பெனடிற், மன்னார் நகரசபையின் முன்னாள் உப தலைவர் ஜான்சன், மன்னார் நகரசபை முன்னாள் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் ஆகியோர் நினைவு சுடரை ஏற்றி நினைவஞ்சலியை ஆரம்பித்து வைத்த நிலையில் அதனைத் தொடர்ந்து கலந்து கொண்ட மீனவர்கள், வர்த்தகர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மெசிடோ நிறுவன ஊழியர்கள் இணைந்து சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.



# தமிழ் தாயகத்தில் சட்டவிரோத சிங்கள குடியேற்றங்களை மறைக்க வீரசேகர பித்தலாட்டம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களை சிங்களவர்களிடம் இருந்து தமிழர்கள் பறிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இனவாத பித்தலாட்டத்தை ஊடகங்களில் கட்டவிழ்த்து விட்டுள்ளார் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சிங்கள மக்களை ஏமாற்றி தமிழர் மீது இனவாதத்தை வீசி தன்னுடைய அரசியல் பிழைப்பை நடத்தும் வீரசேகர இலங்கைத்தீவு ஈழம் என்ற பெயரில் தமிழர்களால் ஆளப்பட்டிருக்கும் போது கள்ளத் தோணியில் வந்து குடியேறிய விஜயனின் பரம்பரை என்பதை இடை இடையே மறந்து விடுகிறார். பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க சொன்னது போல சரத் வீரசேகரவின் மூளையை பரிசோதிக்க வேண்டும்.

பிரித்தானியரின் காலணித்துவ ஆட்சியில் நிர்வாக இலகுவாக்கலுக்காக தமிழர் தேசம் ஏனைய நிர்வாக அலகுகளுடன் இணைத்து ஒரே அலகாக கோல்புறுக் அரசியல் அமைப்பில் உள்வாங்கப்பட்டமையே தமிழரின் சுயாட்சி நசுக்கப்பட காரணமானது. பின்னர் 1948 ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் பிரித்தானியரால் வழங்கப்பட்டது. ஆனால் தமிழர்களுக்கு அது சுதந்திரம் அல்ல மேலும் அடிமைப்படுத்தலாக சிங்கள ஆட்சியாளர்களால் வலுவடைந்தது அத்துடன் தமிழரின் சுயநிர்ணய உரிமைகள் கபளீகரம் செய்யப்பட்டன.

வடக்கு கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்பில் 1950 ஆண்டு அம்பாறை மாவட்டம் கல்லோய திட்டம் என்ற போர்வையில் சட்டவிரோத சிங்கள குடியேற்றங்கள் ஆரம்பித்து பின்னர் அல்லை, கந்தளாய், மணலாறு என வியாபித்துள்ளது தமிழரின் பூர்வீக நிலங்கள் சட்டவிரோத சிங்கள குடியேற்றங்களினால் பறிக்கப்பட்டுள்ளன இப்படிப்பட்ட உண்மையை மறைத்து சிங்கள மக்கள் மத்தியில் மேலும் இனவாதத்தை தூண்ட வடக்கு கிழக்கு மாகாணங்கள் சிங்கள மக்களிடம் இருந்து பறி போகிறது என பித்தலாட்டம் போடுகிறார் வீரசேகர என குறிப்பிடப்பட்டுள்ளது.

# வல்வெட்டித்துறை பொலிஸ் உத்தியோகத்தரின்நகைகளும் பணமும் திருடிய குற்றச்சாட்டின் கீழ் எழுவர் கைது!

வல்வெட்டித்துறை பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு உள்ளிட்ட சில இடங்களில் இடம்பெற்ற களவுச் சம்ப வத்துடன் தொடர்புடைய 7 பேர் பொலிஸ ரால் கைது செய்யப்பட்டதுடன் 16 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 பேர், மன்னாரைச் சேர்ந்த 2 பேர், முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் என 7 பேர் காங்கேசன் துறை குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு வல் வெட்டித்துறை பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் நடந்த களவுச் சம்பவத்தில் ஐந்தரை இலட்சம் ரூபாய் பணமும் 16 பவுண் நகைகளும் களவுபோன சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

விசாரணைகளுக்கு பின்னர் சந்தேகநபர்களை பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றத்தில் முற்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இருவர் பிணையில் விடுவிக்கப் பட்ட தோடு ஐந்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது.

# வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்ட உலருணவுப் பொதிகள்

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



வடக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கான ஒரு தொகுதி உலருணவுப் பொருட்கள் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

தற்போது பெய்துவரும் கனமழை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நோக்கில் சர்வதேச அரிமா கழகத்தினால் ஆயிரம் பொதிகள் ஆளுநரின் உதவிச் செயலாளர் ஜி.ஏகாந்தனிடம் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது ஜனாதிபதியின் வடக்கு விவகாரங்களுக்கான மேலதிக செயலாளர் இளங்கோவன், ஆளுநர் செயலக அதிகாரிகள், வடமாகாண அரிமாக் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

குறித்த பொதிகள் விரைவில் பாதிக்கப்பட்ட பொது மக்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்தின் போது காணி விடுவிப்புக்கு பச்சை கொடி காட்டப்படும் – அமைச்சர் டக்ளஸ் உறுதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான விஜயத்தின் போது காணி விடுவிப்புக்கள் தொடர்பில் பச்சைக்கொடி காட்டப்படும் என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வனவள பாதுகாப்பு, வன ஜீவராசி திணைக்களம் என்வற்றின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள காணி விடுவிப்பு தொடர்பில் 11 கட்டம் இருந்தது. அதில் 4 கட்டமே பூர்த்தியாகியுள்ளது. ஏனைய கட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அவைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் 100 வீதம் சரிவரும் என்ற நம்பிக்கை உண்டு.

உயர்பாதுகாப்பு வலயமாக படைத்தரப்புக்களின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்க தொடர்ந்து முயற்சிக்கிறேன். முடிந்த வரையில் காணி விடுவிக்க நடவடிக்கைகளை எடுப்பேன்.

ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரும் வேளையில் காணிகளை விடுவிக்கவோ, அல்லது அது தொடர்பில் பச்சை கொடியை ஜனாதிபதி காட்டுவார் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஏன் கலந்து கொள்ளவில்லை என அமைச்சரிடம் கேட்ட போது, வடக்கில் எம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் நிறைய இருந்தமையால் நான் வடக்கில் தங்கி இருந்தேன். அதனால் சந்திப்புக்கு செல்லவில்லை. ஜனாதிபதியுடன் மக்களுக்காக தொலைபேசியில் கதைக்க கூடிய நிலையில் உள்ளேன். பல்வேறு தடவைகள் கதைத்தும் உள்ளேன்.

என் கட்சி சார்பில், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் கலந்து கொண்டார் என பதில் அளித்தார்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சுனாமி நினைவேந்தல்!

சுனாமி பேரழிவு ஏற்பட்டு (26-12-2023) செவ்வாய்க்கிழமை அன்று 19 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் பல்வேறு பகுதிகளிலும் நினைவேந்தல்கள் இடம்பெற்று வருகின்றன.







அந்தவகையில் அன்றையதினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் உயிரிழந்த உறவுகளுக்கு ஈகைச் சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# கப்பல் மாதா உதவும் கரங்கள் அமைப்பினரால் மாணவர்கள், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்



கப்பல் மாதா உதவும் கரங்கள் அமைப்பினரால் மாணவர்கள், ஆசிரியர்கள் கௌரவிக்கும் நிகழ்வு 23-12-2023 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலை 3.00 மணியளவில் கட்டைக்காடு மரியாள் மண்டபத்தில் ஆரம்பமான குறித்த நிகழ்விற்கு கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்டணம் அடிகளார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கட்டைக்காடு பங்குத்தந்தை A. அமல்ராஜ், கட்டைக்காடு றோ,க,த,க பாடசாலை அதிபர் T. யோகலிங்கம் மற்றும் முள்ளியான் கிராம சேவகர் K. சுபகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.





உயர்தர மாணவர்கள் மற்றும் சித்தியடைந்த ஏனைய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கட்டைக்காடு கப்பல் மாதா உதவும் கரங்கள் அமைப்பு வடமராட்சி கிழக்கில் மட்டுமல்ல யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலும் அதிகளவான சமூக சேவைகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் முன்னெடுப்பு

- மன்னார் நிருபர் (24-12-2023)



தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம் சனிக்கிழமை (23) மாலை முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

குறித்த பாடசாலை மாணவர்களுக்கு சூழல் அறிவை புகட்டி அவர்களுக்கு சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலய அதிபர் கே.சுரேந்திரன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், கனடா - பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உப தலைவரும் ரொறன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவருமான என். லோகேந்திரலிங்கம் கலந்து கொண்டார்.

இதன் போது தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் மற்றும் விவசாய போதனாசிரியர் ரி. துளசிராம் ஆகியோர் மாணவர்களுக்கு சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு ரொறன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பினால் பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டது.

வன்னி மண்ணின் முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மற்றும் எழுதும் கருவிகள் கையளிக்கும் வைபவத்தில் நேரடியாகக் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியதில் கிடைத்த மனநிறைவு மிக அதிகம்.

22-12-2023 அன்று சனிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வு சாத்தியமாகியமைக்கு காரணமாக அமைந்தவர்கள் மூவர். தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் வட மாகாண அமைச்சருமான பொ. ஐங்கரநேசன். கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலய அதிபர் திரு. க. நரேந்திரன் மற்றும் கொக்குத்தொடுவாய் பிரதேச விவசாய போதனாசிரியர் துளசிராம் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். இந்த மூவரின் மனித நேயப்பண்பை நாம் மெச்சுகின்றோம்.

அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த காரணமாக அமைந்தவர்கள் கனடாவில் இயங்கிவரும் "ரொறன்ரோ மனித நேயக்குரல்" அமைப்பிற்கு தங்கள் அன்பளிப்புக்களை வழங்கிவரும் "சக்தி" ஞானம்மா திருநாவுக்கரவு அவர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களான கணேசன் சுகுமார், சங்கர் நல்லதம்பி - சாந்தா பஞ்சலிங்கம் - நிமால் விநாயகமூர்த்தி - பாஸ்கரன் சின்னத்துரரன் - பாஸ்டர் சோதி - ரஜீவ் செபராசா - குலா சின்னத்துரை உட்பட பல அன்பர்களுக்கு "ரொறன்ரோ மனித நேயக்குரல்" அமைப்பின் தலைவர் என்ற வகையில் திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம் இந்த வைபவத்தில் நன்றி தெரிவித்தார். இங்கே காணப்படும் மாணவி அன்றைய நிகழ்வில் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதை ஒன்றை உணர்வோடு வாசித்தமை பாராட்டுக்குரியது.







# மலையக தமிழரின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டு பொறுப்பேற்க வேண்டும்

## "மலையக மாற்றம்" நிகழ்வில் மனோ கணேசன்



இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டு தார்மீக பொறுப்பேற்க வேண்டும் என உரக்க கூறி வைக்க விரும்புகிறேன். இராதாகிருஷ்ணன் இந்த மகத்தான நிகழ்வை நடத்தி, மலையக தமிழ் மக்களின் வரலாற்று, நிகழ்கால அவலங்களை, உரை, கலை வடிவங்களில் இந்த மேடையில் கூற வைத்து விட்டார். தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் என்ற முறையில் எனக்கு ஒரு கடப்பாடு இருக்கிறது. வரலாறு, நிகழ்கால அவலங்களுக்கு அப்பால் நாம் இன்று எங்கே, எப்படி நிற்கிறோம், எங்கே, எப்படி போக வேண்டும் என்ற எதிர்காலம் கூற வேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கிறது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

மலையக மக்கள் முன்னணி சார்பில் இராதாகிருஷ்ணன் எம்பி தலைமையில் நுவரேலியாவில் நடைபெற்ற "200ல் மலையக மாற்றம்" விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது,

இந்நாட்டின் சிங்கள, ஈழத்தமிழ், முஸ்லிம் சகோதர இனத்தவர் தங்கள் ஓட்டங்களை 1948லேயே ஆரம்பித்து விட்டார்கள். மலையக தமிழர் தமது குடியுரிமையை சட்டப்படி முழுமையாக பெற்றுக்கொள்ளவே 2003ம் வருடம் ஆகிவிட்டது. ஆகவே நாம் எமது ஓட்டத்தை தாமதமாக ஆரம்பித்த பிரிவினர் ஆகும். ஆகவே எமது அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார அடைவுகள், சகோதர இனத்தவர்கள் அடைந்துள்ள, இலக்குகளை விட குறைவாக இருப்பது ஆச்சரியம் அல்ல. ஆனால், இந்த இருபது வருடங்களில் ஏனையோர் மரதன் ஓடும்போது நாம் நூறு மீட்டர் ஓடி வேகமாக பல முன்னேற்றங்களை கண்டுள்ளோம். எனினும் இன்னமும் நாம் போக வேண்டிய தூரம் கணிசமாக இருக்கிறது.



நாம் அடையவேண்டிய வளர்ச்சியை அடையாமல் குறைவளர்ச்சியில் நிற்கிறோம். மலையக தமிழரின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டு பொறுப்பேற்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் பாராளுமன்றம் வரும் போதெல்லாம், 1948ல் இலங்கையின் அந்நிய செலவாணி தொகை ஆசியாவிலேயே ஜப்பானுக்கு அடுத்தபடியாக அதிகமாக இருந்தது என்று பெருமையாக கூறுவார். அது உண்மை. அதன் பின்னுள்ள கசப்பான உண்மை என்ன? அந்த அதிக தொகை அந்நிய செலவாணியை இரத்தம், வியர்வை, கண்ணீர் சிந்தி பெற்று தந்தது நமது மக்களின் தேயிலை, இறப்பர் பெருந்தோட்ட உழைப்பினால் கிடைத்த ஏற்றுமதி வருமானம் ஆகும். ஆனால், இதற்காக 1948லேயே முதல் சுதந்திர இலங்கை அரசு எமக்கு செய்த கைம்மாறு என்ன? எமது குடியுரிமையையும், வாக்குரிமையையும் பறித்து எம்மை நாடற்ற மக்கள் ஆக்கியதே அந்த கைம்மாறு ஆகும்.

1964ல் எம்மை கலந்தாலோசித்து எமது உடன்பாடுகளை பெறாமலேயே இந்திய அரசு, எம்மில் பெரும்பான்மையோரை நாடு கடத்த உடன்பாடு தெரிவித்தது. அன்று ஏற்படுத்தப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலமாக எமது மக்கள் கால்நடைகள் போல் நாடு கடத்தப்பட்டு, இங்கே நாம் அரசியல்ரீதியாக பலவீனப்படுத்தப்பட்டோம். இந்த ஒப்பந்தம் எமக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம் ஆகும்.

1972 வரை நாம் குடியரசு ஆகவில்லை. அதுவரை பிரிட்டிஷ் மகாராணியார் தான் எமது தேசத்தலைவராக இருந்தார். நாம் டொமினியன் சிலோன் என்ற நாடாக இருந்தோம். எம்மை 200 வருடங்களுக்கு முன்னர் இங்கே கொண்டு வந்தவர்களும் அவர்கள்தான். 1948ல் எமது குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட போதும், 1964ல் நாடு கடத்தல் ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும் பிரிட்டிஷ் மகாராணியார் கண்ணை மூடிக்கொண்டு இருந்தார். இந்த ஒப்பந்தம் பிரிட்டிஷ் அரசால் எமக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம் ஆகும்.

இந்த வரலாற்றின் காரணமாக, எமது எதிர்கால வளர்ச்சிக்கு உதவிட வேண்டிய தார்மீக கடப்பாடு இன்று, இந்திய, பிரித்தானிய அரசுகளுக்கு உண்டு. அதை இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களும், இங்கிலாந்து பிரதமர் ரீஷி சுனக் அவர்களும் நிறைவேற்ற வேண்டும் எனக்கோருகிறேன். கடந்த வாரம் நானும், இராதாகிருஷ்ணனும் இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் அன்ரு பெட்ரிக்கை சந்தித்த போது, இதை நான் அவருக்கு தெளிவாக எடுத்து கூறினேன். அவரது இன்றைய பிரிட்டிஷ் மன்னர் சார்ள்சின் அரசு எமக்கு உதவிட வேண்டும். இந்தியாவின் கடப்பாடு பற்றி நான் பலமுறை இந்திய தலைவர்களிடம் எடுத்து கூறியுள்ளேன்.

இலங்கையின் கடப்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஆகியோர் நிறைவேற்ற வேண்டும். எனது கருத்தை இவர்களுக்கும் நான் பலமுறை எடுத்து கூறியுள்ளேன்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தொற்றுக்குள்ளான 114 பேர் சிகிச்சைக்காக அனுமதிப்பு

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தொற்றுக்குள்ளான 114 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தொற்று நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தற்போது 114 பேர் டெங்கு தொற்றுக்குள்ளாகி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே இருந்த விடுதிகளில் இடப்பற்றாக்குறை காணப்பட்டதன் காரணமாக மேலதிகமாக 2 காய்ச்சல் விடுதிகளை இந்த டெங்கு நோயாளர்களுக்கென புதிதாக ஆரம்பித்திருக்கின்றோம்.

டெங்குத் தொற்றுக்குள்ளாகி விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 114 பேரில் அரை வாசிக்கும் மேற்பட்டோர் சாதாரண காய்ச்சலுடன் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் அதேபோல அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு தாதியரின் கண்காணிப்பில் அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

மேலும் சுகாதார அமைச்சினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டுடெங்கு தொற்றுக்குள்ளானோக்குரிய மருந்து வகைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதன் காரணமாக விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான சிகிச்சைகள் உரிய முறையில் வழங்கப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

# கொக்குத் தொடுவாயில் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம்




தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி சனிக்கிழமை (23.12.2023) முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது. மாணவர்களுக்குச் சூழல் அறிவைப்புகட்டி அவர்களுக்குச் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், மாணவர்களின் பன்முக ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தின் அதிபர் க. நரேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கனடா - உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், ரொறன்ரோவின் மனிதநேயக் குரல் அமைப்பின் தாபகத் தலைவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் கலந்துகொண்டிருந்தார். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், விவசாயப் போதனாசிரியர் த. துளசிராம் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றியிருந்தார்கள்.

நூற்றுக்கணக்கான மாணவர்களும், பெற்றோர்களும் பங்கேற்றிருந்த இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் அனைவருக்கும் ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பால் சூழல் விழிப்புணர்வுக் குறிப்பேடுகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.







# பிள்ளையார் ஆலயத்தில் தேவாரம் ஓதிய முதியவர் மயங்கிச் சாவு – வல்வெட்டித்துறையில் சம்பவம்!

பிள்ளையார் ஆலயத்தில் தேவாரம் ஓதிக் கொண்டிருந்த முதியவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சி.இராசரத்தினம் (வயது-88) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஆலயத்துக்குத் தினமும் சென்று தேவாரம் ஓதும் இவர் வழமை போன்று ஆலயத்துக்குச்சென்றுள்ளார். ஒலிவாங்கியில் தேவாரம் ஓதிக்கொண்டிருந்தபோது திடீரென அவர் மயங்கிச் சரிந்துள்ளார்.

உடனடியாக வல்வெட்டித்துறை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4



# அனைத்து தமிழ்தேசிய கட்சிகளும் பொது வேட்பாளர் விடயத்தில் ஒன்றுபட்டு செயற்பட முன்வர வேண்டும் — சுரேஷ் பிரேமச்சந்திரன்

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் ஊடாக சிங்கள தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர்களை தமிழ்த் தரப்புடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைக்கு வரவைக்க முடியும். ஆகவே தமிழ்தேசிய பரப்பில் இயங்கும் அனைத்து கட்சிகளும் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஒன்றுபட்டு செயற்பட முன்வர வேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் 26-12-2023 அன்று நடத்திய ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு வலியுறுத்தியிருந்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி மற்றும் தேர்தல் ஆணையாளரினாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரைகாலமும் தென்னலங்கையில் இருந்து வந்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களித்து வந்த போதிலும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பதுதான் வரலாறாக இருக்கின்றது.

கடந்த காலத்தில் ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தவர்கள் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயத்திற்கு முன்னுரிமை கொடுத்து தீர்வு காணப்பட்டிருக்குமாக இருந்தால் நாடு இன்று பாரிய பொருளாதார நெருக்கடி கூட ஏற்பட்டிருக்காது தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காது தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய யுத்தம் தொடுக்கப்பட்டிருந்தது. தற்போது கூட அரசியலமைப்பில் இருக்கக்கூடிய 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதாக பேச்சுவார்தர்தைகளை நடத்திய ஜனாதிபதி வருகின்ற நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் வரும் ஒருவருடத்திற்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை பற்றி ஆராயலாம் என தற்போது கூறியுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாக இனிமேல் 2026 ஆம் ஆண்டுதான் பேசுவோம் என்பதே இதன் அர்த்தமாகும். குறிந்தபட்சம் 13 ஆவது திருத்தத்தையாவது நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்காது எல்லாவற்றையும் 2026 ஆம் ஆண்டுவரை ஒத்திவைத்திருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த லட்சனத்தில் இவர்களுக்கு வாக்களித்து தமிழ் மக்கள் என்னத்தை சாதிக்கப்போகின்றோம் என்ற கேள்வி எழுகிறது. நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகிற்னற சமுதாயமாக இருக்க விரும்பவில்லை. இந்த அடிப்படையில் ஒட்டுமொத்த தமிழர் தரப்பு சேர்ந்து தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் ஊடாக சிங்கள தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர்களை தமிழ்த் தரப்புடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைக்கு வரவைக்க முடியும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி முடிவுக்கு வந்துள்ளது.

வடகிழக்கில் ஏறத்தாள ஐந்து ஆறு இலட்சம் தமிழ் வாக்காளர்கள் உள்ளனர். ஆகவே இந்த தமிழ் வாக்குகள் சிங்கள வேட்பாளர்களுக்கு தேவைப்படுமிடத்து தமிழ்த் தரப்புடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைக்கு வரவேண்டிய களம் ஒன்றை உருவாக்க வேண்டிய கால தேவையின் அடிப்படையில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதென முடிவெடுத்துள்ளோம்.

ஜனநாய தமிழ்த் தேசிய கூட்டணியின் இந்த முடிவை தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேவரனும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் இதற்கு சம்மதித்து வருவார்களாக இருந்தால் மிக விரைவாக தமிழ் தரப்பில் முன்னிறுத்தப்படும் பொது வேட்பாளர் யார் என்ற விடயத்தை ஆராய்ந்து சரியான ஒருவரை தெரிவுசெய்யக்கூடியதாக இருக்கும்.

தமிழ்த் தரப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் இணைந்து பொது வேட்பாளரை நிறுத்துவோமாக இருந்தால், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு களத்தை ஒருவாக்கி கொடுக்கும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம் - என தெரிவித்தார்.

# கடல்சார் பாரம்பரியமே தலைவர் பிரபாகரனுக்குப் பேராண்மையைப் பெற்றுத் தந்தது

## கடற்கோள் நினைவு நாளில் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



கடல் வாழ்க்கை நில வாழ்க்கையைவிடச் சவால்கள் நிறைந்தது. கடலில் போனால் திரும்பி வருவோமா என்று தெரியாத நிச்சயமற்ற வாழ்க்கை மரணபயத்தை அறவே இல்லாததாக்கியது. சூறைக் காற்றுக்கும் கொந்தளிக்கும் அலைகளுக்கும் எதிராக மேற்கொள்ளும் பயணம் பெரும் பயிற்சியாக அமைந்து உடலையும் மனதையும் வலுவாக்கியது. நிச்சயமற்ற வருவாய் பொருள் இழப்புக் குறித்த கவலையை இல்லாமல் ஒழித்தது.

இக்கடல்சார் பாரம்பரிய குணவியல்புகளுடன் இலட்சிய உறுதியும் சேர்ந்து தலைவர் பிரபாகரனுக்குப் பேராண்மையைப் பெற்றுத் தந்தது. அவரால் கடலையும் நிலத்தையும் குறிப்பிட்ட காலம் வரையிலேனும் கட்டிக்காக்க முடிந்தது. இன்று அவர் இல்லாத நிலையில் சூறையாடப்படும் கடலைப் பாதுகாக்கவேண்டிய பெரும் பொறுப்பு நெய்தல் நில மக்களிடமே உள்ளது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் கடற்கோள் நினைவுநாள் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை (26.12.2023) மாதகல் விநாயகர் இறங்குதுறையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பூமியின் வெப்பநிலை மிக உயர்வாக இருந்த ஆண்டாக நடப்பு 2023 ஆம் ஆண்டு பதிவாகி உள்ளது. வரவிருக்கும் 2024 ஆம் ஆண்டில் பூமியின் வெப்பநிலை கைத்தொழில்புரட்சி ஆரம்பமானபோது இருந்ததைவிட 1.5 பாகை செல்சியஸ் அளவில் உயரும் என்று விஞ்ஞானிகளால் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இது பூமியின் காலநிலையில் கடுமையான மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது. பூமி சூடாகுவதால் காலநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களால் நாம் ஏற்கனவே ஒருபுறம் கடும் மழையும் வெள்ளப்பெருக்கும், இன்னொருபுறம் கடும் வரட்சி, பனிமலைகளின் உருகுதல், கடல்மட்ட உயர்வு, பயிர் உற்பத்தி பாதிப்பு, உயிரினங்களின் அழிவு என்று பல பாதகங்களை அனுபவிக்க ஆரம்பித்துவிட்டோம்.

பூமியின் காலநிலையில் நிலத்தைவிட கடல் ஆற்றுகின்ற பங்களிப்புப் பெரியது. பூமியின் மீது சூரியனில் இருந்து வீழுகின்ற வெப்பத்தின் பெரும் பகுதியைக் கடல்தான் உறிஞ்சிவைத்திருக்கிறது. உறிஞ்சிய வெப்பத்தைச் சமுத்திர நீரோட்டங்களின் மூலம் பூமி முழுவதும் சமனாகப் பரவச்செய்கிறது.

பூமியைச் சூடுபடுத்தும் கரியமில வாயுவைத் தன்னுள் ஈர்த்துக் கரைத்துவைத்திருக்கும் மிகப்பெரும் காபன் தொட்டியாகச் செயலாற்றுகிறது. கடல்தான் பூமியின் சூட்டைத் தணிவிக்கும் மழை பொழிவதற்குக் காரணமாகவும் உள்ளது. ஆனால், கடலின் இருப்பும் உயிர்ப்பும் தான் எமது இருப்பும் உயிர்ப்பும் என்று தெரியாத நாம் கடலை மெல்ல மெல்லச் சாகடித்துக் கொண்டிருக்கிறோம்.

எமது பொருத்தமற்ற மீன்பிடி முறைகளாலும் அளவுக்கு அதிகமான மீன்பிடியாலும், கடலட்டை வளர்ப்புப் போன்ற ஒற்றையினப் பண்ணைகளாலும் கடலில் மீன் இனங்கள் அழிந்து வருகின்றன. இன்று கடலில் மீன்களை விடப் பிளாஸ்ரிக் துகள்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

கடலில் அதிக அளவில் பிளாஸ்ரிக்கைத் தள்ளிக் கொண்டிருக்கின்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை 14ஆவது இடத்தில் உள்ளது. கடலை எமது கழிவுகளைக் குவிக்கின்ற ஒரு குப்பைத் தொட்டியாகவே நாம் பாவித்துக்கொண்டிருக்கின்றோம்.

சூழல்மாசுபாட்டால் ஒட்சிசன் குறைவு ஏற்பட்டுப் பல இடங்களில் கடல் இறக்கத் தொடங்கியிருப்பதாகக் கடலியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

கடல்தான் காநிலைமாற்றப் பாதகங்களைத் தடுக்கும் கேடயம் என்பதை உணர்ந்து கடற்சூழற் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

கடலைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அனைத்து மக்களுக்கும் உண்டு. ஆனாலும் கடலின் பங்காளிகளான, கடலையே வாழ்வாதாரமாகக் கொண்ட கடற்றொழிலாளர்களுக்கு இந்தக் கடப்பாடு அதிகமாகவே இருக்கிறது.

அதற்கான பட்டறிவும், பராக்கிரமும் இவர்களிடம்தான் அதிகளவில் இருக்கிறது. கடற்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அவசரப் பணியாக விரைந்து மேற்கொள்வதே பூமியில் எமது இருப்புக்கான உத்தரவாதமாக அமையும். இதுவே, கடற்கோளில் பலியான எம் உறவுகளுக்கு நாம் செலுத்துகின்ற உண்மையான அஞ்சலியாகவும் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.




# Sri Lanka Navy Cut to Size by the Nation's Human Rights Body

Siva Parameswaran

The Sri Lanka Navy has been restrained from stopping its citizens from traveling to Iranaitheevu island off the coast of Mannar by the Human Rights Commission of Sri Lanka (HRCSL) while allowing a fundamental Rights petition by Rukhi Fernando a journalist and human rights activist.

"The Navy had violated my right to freedom of movement by blocking me from traveling to the remote Iranaitheevu island in Killinochchi district on March 5, 2021," he said in his petition to the HRCSL.

HRCSL has also instructed the navy not to ask for prior authorization or notice unless such restrictions are warranted by law and clear orders are issued to the officers stationed in the North Central Naval area.

Emphasizing the freedom of movement is guaranteed under article 14 (1) (h) of the Sri Lankan constitution and also article 12 of the International Covenant on Civil and Political Rights in which Sri Lanka is also a signatory, HRCSL made it clear "Given the possibility of future infringements of freedom of movement of citizens traveling to Iranaitheevu, it was not appropriate to it was not proper to refer this matter for conciliation or mediation".

Background

Rukhi Fernando along with two other journalists, had arrived on the morning of 5th March 2021 at Iranaimathanagar in Mulankavil with the intention of visiting Iranaitheevu. However, the Sri Lanka Navy at the relevant checkpoint prevented him and the other two persons from boarding a boat and traveling to the island. He complained that his freedom of movement had been violated by the prevention of his entry into Iranaitheevu.

Subsequently, the Commission called for a report from the Sri Lanka Navy Headquarters.

In what is considered a vague reply, a letter on behalf of the Commander of the Sri Lankan Navy, informed the Commission that a 'communication gap' between the Naval Headquarters and the North Central Naval Area and that no journalist had been denied entry into the said island.

In what could be construed as a contradiction the Naval Headquarters in the same reply said as quoted in the HRSCL in their order "it stated that if any journalists wished to travel to the said island in the future, they should inform the Sri Lanka Navy, which can provide assistance with respect to traveling to the island".

As part of their investigation, the HRSCL also called for a report from the District Secretary, Killinochchi who replied, "Since there is no police post in Iranaitheevu, the Sri Lanka Navy is usually vigilant with respect to illegal activities. Therefore, the Sri Lanka Navy usually checks the identity of non-residents who wish to enter Iranaitheevu".

Rukhi and his team had rented a van for their journey to Iranaitheevu.

"We had rented a van and undertaken a long overnight journey from Colombo to Mulankavil from where we had arranged to rent a boat from the local fisherfolk to travel to Iranaitheevu island. Community leaders in Iranaitheevu, including the parish priest, were waiting for us. I had planned to join a meeting and protest by the residents of the island that day. I also wanted to write an article about the socio-political-economic situation on the island and visit the historical Catholic church, which I had done on previous visits. But due to the arbitrary restrictions imposed by the Navy, I could not do any of this".

Apart from its 'communication gap' the Sri Lankan Navy also caught itself entangled with their spokesperson telling the local media on March 16th, 2021 that "Anyone who wishes to go to Iranaitheevu is allowed to enter the island now".

Rukhi Fernando has questioned the use of the word "now" saying that implies at least people were not allowed to go earlier.

"This implies that the Navy has restrictions for certain people going to Iranaitheevu island or that they will only allow people to go if they make prior notice.

Not only those outside the island are allegedly harassed by the Navy. Locals too suffer at the hands of the Navy.

"Even people who were born in Iranaitheevu, but are not on the list of the Navy are not allowed to enter" according to media reports.

A few months back Belgian photojournalist working for a Netherlands media was stopped from proceeding to Iranaitheevu. Elke Scholiers, based in New Delhi and working for various international outlets, had prior permission and an accreditation card from the media ministry for her coverage.

"On a work trip in Sri Lanka. The Navy and Ministry of Defence at Mulangavil is restricting my movement as a photojournalist to visit the Island Iranaithivu. Obtained documentation to access island and legally work in Sri Lanka. The navy also advised me to not tweet" she tweeted on the 1st of October this year.

However, after a few hours and numerous calls, she was finally able to go to the island which she confirmed in an updated tweet subsequently.

"Update - After 6h of negotiations between myself and various navy officials and with the help of the Ministry of Home Affairs and HRCSL, I was able to reach Iranaithivu Island. I made about 50 phone calls and sent around 15 emails in this 6h stretch".

Rukhi Fernando also says while the HRCSL deemed the action of the Navy to be not according to law, the Commission rejected his requests to recommend to the Navy acknowledge the violations and submit a written apology to him. This also included reimbursing the costs incurred by his traveling towards Iranaitheevu and compensation for violation of his rights.

HRSCL has also instructed the Navy to "Issue clear written instructions in the form of a circular to the relevant officers stationed in the North Central Naval Area directing the same to permit all citizens of Sri Lanka to enter Iranaitheevu without any instructions, including the need of prior authorization or notice".


# MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinic canada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE


RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# கடன் வாங்கிக் கடனை அடைத்த ஆண்டே சென்று வருக

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



நாட்டில் நத்தார் மரத்தின் விலையை வைத்து நாட்டின் பொருளாதாரத்தை மதிப்பிடலாம். டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் ஒன்றரை அடி உயரமான ஒரு நாத்தார் மரம் கிட்டத்தட்ட 3500 ரூபாய்க்கு விற்கப்பட்டது. எனினும் ஒரு கிழமைக்கு பின் சுமார் 4 அடி உயரமான நத்தார் மரம் 6000 ரூபாய்க்கு வந்தது. ஆனால் முட்டை விலை குறையவில்லை. கூடியது. 60 ரூபாய் ஒரு மூட்டை. இம்முறை கிறிஸ்மஸ் பெரும்பாலான ஏழைகளின் வீடுகளில் கேக் இல்லாத கிறிஸ்மஸ் தான்.

முட்டை விலை மட்டுமல்ல பச்சை மிளகாய், தக்காளி உள்ளிட்ட அனைத்து மரக்கறிகளின் விலைகளும் உயர்ந்து விட்டன. வளமையாக கிறிஸ்மஸ் சீசனில் மரக்கறி விலைகள் உயர்வதுண்டு. தைப் பிறப்போடு குறைவதுண்டு. ஆனாலும் இம்முறை விலை உயர்வு அசாதாரணமாகக் காணப்பட்டது. பச்சை மிளகாய் ஒரு கிலோ 1400 ரூபாயிலிருந்து 2000 ரூபாய் வரை போனது. வெங்காயம் தக்காளியின் விலைகளும் அதிகம்.

சிங்கள யூ டியூப்பர்கள் மரக்கறி விலை உயர்வைக் காட்ட சில வேடிக்கையான காணொளிகளை வெளியிட்டார்கள். அதில் ஒரு காணொளியில் ஒரு பச்சை மிளகாயை நூலில் கட்டி கறிக்குள் போடுகிறார்கள். கறி காய்சியதும் அதை எடுத்து மற்றொரு கறிக்குள் போடுகிறார்கள். வேறு ஒரு காணொளியில் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் ஒரு பக்கம் இன்னொரு பக்கம் ஒரு தக்காளிப் பழம் மட்டும். அதாவது ஒரு தக்காளி பழத்தின் பெறுமதிதான் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் என்று பொருள். இப்படித்தான் இம்முறை நாட்டில் ஆண்டிறுதி அமைந்தது.

கடந்த 24ஆம் திகதி இரவு பதினோரு மணிக்கு அதாவது நத்தார் பிறப்புக்கு முன், மட்டக்களப்பில் ஒரு சோகமான சம்பவம் இடம்பெற்றது. 42 வயதான ஒரு மேசன் கல்லடி பாலத்தில் இருந்து வாவிக்குள் குதித்து தற்கொலை செய்ய முயற்சித்தார். ஆனால் நீரில் மூழ்கத் தொடங்கியதும் சாகப் பயந்து பாலத்தின் தூண் ஒன்றைப் பிடித்துக் கொண்டு கூக்குரல் எழுப்பினார். படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றினார்கள். போலீஸ் இப்பொழுது அவரை தற்கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்திருக்கிறது.

அவர் ஒரு ஏழை மேசன். ஐந்து பிள்ளைகளின் தந்தை. கட்டிடப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால், அவருக்கு தொழில் இல்லை. நத்தார் சீசனை முன்னிட்டு ஆடைகள் வாங்கக் காசு இல்லை. வீட்டில் மனைவி நச்சரித்திருக்கிறார். எனவே, வாழ்க்கை வெறுத்துப் போன அக்குடும்பத் தலைவர், இயேசு நாதர் பிறந்த நாள் எனது இறந்த நாளாக அமையட்டும் என்று கூறி பாலத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்ய முயற்சித்திருக்கிறார். இயேசு பிறப்பை தனது இறப்பாக அறிவிக்கும் அளவுக்கு ஒரு ஏழை கிறிஸ்தவரை வறுமை தாக்கியிருக்கிறது. இதுதான் நாட்டில் ஆண்டு இறுதி நிலவரம்.

இந்த லட்சணத்தில் அடுத்த ஆண்டு நெல் உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் எச்சரிக்கிறார்கள். நெற் பயிர்களைத் தாக்கும் வெள்ளைத் தத்தியை அழிப்பதற்கு விவசாயத் திணைக்களம் முயற்சிக்கவில்லை என்றும் அதனால் விளைச்சல் பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் கூறுகிறார்கள். அதாவது பழைய ஆண்டு நல்ல செய்திகளோடு முடியவில்லை. புதிய ஆண்டும் நல்ல செய்திகளோடு பிறக்கவில்லை என்று பொருள்.

அடுத்த ஆண்டு அரசாங்கம் வற் வரியை அதிகரிக்க உள்ளது. அதனால் பணக்காரர்கள் மட்டும் பாதிக்கப்பட போவதில்லை, ஏழைகளும் பாதிக்கப்படுவார்கள். ஏனெனில் விலைகள் ஏறப்போகின்றன. மோட்டார் சைக்கிளின் விலை மேலும் ஒரு லட்சத்தால் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய ஆண்டு வரி அதிகரிப்பின் ஆண்டாக, விலை உயர்வின் ஆண்டாக மட்டும் அமையப் போவதில்லை. அது ஒரு தேர்தல் ஆண்டாகவும் அமையப் போகின்றது என்பதுதான் இலங்கைத் தீவின் அரசியல் அவலம். ஆண்டின் தொடக்கத்தில் தமிழரசு கட்சிக்குள் தலைவர் யார் என்பதற்குத் தேர்தல் நடக்கும். ஆண்டின் இறுதியில் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல். ஒரு தேர்தலில் தொடங்கி மற்றொரு தேர்தலில் முடியப்போகும் ஆண்டு.

நாடு இப்போதுள்ள நிலையில் தமிழரசியல் இப்போதுள்ள நிலையில் தமிழரசுக் கட்சிக்குள் ஒரு தேர்தல் அவசியமா? என்று ஒரு நண்பர் கேட்டார். கடந்த 15 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு எதைப் பெற்று தந்திருக்கின்றது? எதையுமே பெற்று தரவில்லை. அதற்கு அதன் தலைமை தான் காரணமா? ஒரு புதிய தலைமை கிடைத்துவிட்டால், தமிழரசுக் கட்சி அதிசயங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்திவிடும் என்று எதிர்பார்க்கலாமா? என்றும் அவர் கேட்டார்.

உண்மைதான். தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது நடப்பவை யாவும் கடந்த 15 ஆண்டுகால தோல்வியின் விளைவுகளே. அந்தத் தோல்விக்கு எல்லாருமே கூட்டுப் பொறுப்பு. இப்பொழுது தலைமைப் பதவிக்காகப் போட்டியிடும் அனைவருமே அதற்குக் கூட்டுப் பொறுப்பு. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள மிகப்பெரிய கட்சி அது என்ற அடிப்படையில், அக்கட்சியின் தோல்விதான் தமிழரசியலின் தோல்வியும் எனலாம். அக்கட்சியின் எல்லா மூத்த உறுப்பினர்களும் அதற்குப் பொறுப்பு கூற வேண்டும். அப்படிப் பார்த்தால் இப்போது இருக்கும் அனைத்து தலைவர்களுமே கடந்த 15 ஆண்டு காலத் தோல்விக்குப் பொறுப்பு. இவர்களில் யார் தெரிவு செய்யப்பட்டாலும் தமிழரசியலை வெற்றிப்பாதையில் செலுத்த முடியுமா?

யார் தலைவராக வந்தாலும் அவர்கள் முன் இரண்டு பெரிய பொறுப்புக்கள் உண்டு. முதலாவது பொறுப்பு, கடந்த 15 ஆண்டுகளாக உடைந்து உடைந்து சிறுத்துக் கொண்டு வரும் தமிழ் ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் ஐக்கியம் உடைந்து போனதற்கு தமிழரசுக் கட்சி தான் பெரும் பொறுப்பு. அக்கட்சி ஏனைய கட்சிகளை அவமதித்தது, அல்லது ஏனைய கட்சிகளுக்குள்ளால் தேர்தல் கேட்டு வெற்றி பெற்றவர்களை உருவி எடுத்துத் தன்னுடன் சேர்த்துக் கொண்டது. இவ்வாறு, தான் ஒரு பெரிய கட்சி என்ற அடிப்படையில், மூத்த கட்சி என்று அடிப்படையில், அதற்குரிய பக்குவத்தோடு தமிழரசுக் கட்சி நடந்து கொள்ளவில்லை. ஏனைய சிறிய கட்சிகளை அவமதித்து, புறக்கணித்து, நிந்தித்து, அதன் விளைவாக ஐக்கியத்தை உடைத்தது தமிழரசுக் கட்சிதான்.

தன்னுடைய பெயருக்குத்தான், தன்னுடைய சின்னதுக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிக்கிறார்கள் என்று தமிழரசுக் கட்சி நம்பியது. தான் ஒரு தும்புத் தடியை தேர்தலில் முன்னிறுத்தினாலும் மக்கள் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிப்பார்கள் என்று தமிழரசுக் கட்சி திமிரோடு நம்பியது. அதனால் ஏனைய பங்காளிக் கட்சிகள் தன்னுடைய பலத்தில்தான் கூட்டமைப்புக்குள் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்று கருதியது. அதனால் பங்காளிக் கட்சிகளை அவமதித்தது; புறக்கணித்தது; ஒன்றாக இருக்க முடியாதபடி அவமானகரமான ஒரு சூழலை ஏற்படுத்தியது. விளைவாக, ஐக்கியம் உடைந்தது; கூட்டமைப்பு சிதைந்தது. இப்பொழுது தமிழரசு கட்சிக்குள்ளேயே உடைவுகள் சிதைவுகள் உருவாகிவிட்டன. எனவே ஒரு மூத்த பழம்பெரும் கட்சியின் தலைவராக வரப் போகும் ஒருவர் முதலில் உடைந்து சிதறிய ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

அதன்பின், அடுத்த கட்டமாக தமிழ் மக்களின் அரசியல் இலக்கை வென்றெடுப்பதற்கான வழி வரைபடத்தை தயாரிக்க வேண்டும். உள்நாட்டில் நாடாளுமன்ற அரசியலின் மூலம் தமிழ் மக்கள் தமது அரசியல் இலக்குகளை வென்றெடுக்க முடியாது. அது பல தசாப்தங்களுக்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பேருண்மை. அதனால்தான் ஆயுதப் போராட்டம் தோன்றியது. எனவே தமிழ் மக்கள் தமது அரசியல் இலக்குகளை அடைவதாக இருந்தால், மிகப் பிரதானமாக பொருத்தமான வெளியுறவுக் கொள்கையை வகுக்க வேண்டும். பிராந்திய மற்றும் அனைத்துலக சக்திகளை எப்படிக் கையாள்வது என்பதற்கு ஒரு பொருத்தமான வெளியுறவுக்கே கொள்கையை வகுத்து, அதற்கு வேண்டிய வெளி விவகாரக் கட்டமைப்பை உருவாக்கி, அடுத்தடுத்த கட்ட அரசியலை நகர்த்த வேண்டும்.

ஆனால் அதற்குரிய தகைமை; கொள்ளளவு; தியாக சிந்தை; விசுவாசம் போன்றன தமிழரசுக் கட்சிக்குள் உள்ள எந்தத் தலைவரிடம் உண்டு? அப்படி ஒரு தலைவரிடம் எல்லா தகமைகளும் இல்லை என்றால், பல்வேறு வகைப்பட்ட ஆளுமைகள் இணைந்த இணைத்தலைமையை உருவாக்கலாம். அதுதான் இப்போதிருக்கும் நடைமுறைச் சாத்தியமான ஒரே வழி. இது தொடர்பாக அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் ஏற்கனவே தமிழரசு கட்சிக்குக் கூட்டுத் தலைமை வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதற்கு அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியை உதாரணமாக காட்டியிருக்கிறார். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் வேறு வேறு கட்சிகள் இணைந்தன. அதனால் அக்கட்சிகளின் தலைவர்கள் கூட்டுத் தலைமையை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் தமிழரசுக் கட்சி ஒரே கட்சி. அங்கே ஒருவர் மற்றவரை விட தன்னை மேலானவராக கருத முற்பட்டதன் விளைவாகத்தான் போட்டோ போட்டிகள் ஏற்பட்டன. எனவே ஒரே கட்சிக்குள் இணைத் தலைமைகளை ஏற்றுக் கொள்வது என்பது உயர்ந்த பட்ச ஜனநாயகம் ஆகும். 2009க்குப்பின் தோன்றிய தமிழ் மக்கள் பேரவையும் இணைதலைமைகளை கொண்டிருந்தது என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இணைத் தலைமையை ஏற்றுக் கொள்வது என்று சொன்னால், அதற்குத் தன்னிடம் இல்லாத தகுதி வேறு யாரிடமோ இருக்கிறது என்பதனை ஏற்றுக் கொள்வதுதான். சட்டப் புலமை, ஆங்கில அறிவு போன்ற தகுதிகள் மட்டும் தலைமை தாங்க போதுமானவை அல்ல. போராட்ட பாரம்பரியமும் பலமான வாக்கு வங்கியும் மட்டும் தலைமை தாங்க போதுமானவை அல்ல. 2009க்கு பின்னரான தமிழ்த் தலைமைகளுக்கு அதைவிடக் கூடுதலாக, பண்புருமாற்றத்திற்குத் தேவையான தகமைகள் அதிகம் வேண்டும். பண்புருமாற்றம் என்பது கட்சி தலைமையை கைப்பற்றுவதற்காக மற்றவர்களைச் சுதாகரித்துதமிழ் தேசிய முகமூடி அணிந்து; நடிப்புக்கு உறவு பாராட்டுவது அல்ல.

ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கு பின்னரான மிதவாத அரசியலுக்கு தேவையான் பிராந்திய மற்றும் பூகோள நிலைமைகளை பொருத்தமாகக் கையாளத் தேவையான; புதிய தொழில்நுட்ப வளர்ச்சியை உள்வாங்கி; புதிய மாற்றங்களுக்கு தயாரான; தலைமைகளே தமிழ் மக்களுக்குத் தேவை. தமிழரசுக் கட்சி அதற்குத் தயாரா?

## வீணாவின் கவிக்கணை

அடுத்தவரை
குறை சொல்பவர்கள்
யாரென்றால்,
தன் இயலாமையை
அறியாமல்,
பார்ப்பவர் மீதெல்லாம்
பொறாமை கொண்டு
புரளிபேசி குறை
சொல்பவர்களாவர்.

# ‘எனக்கு கொலை மிரட்டல்’ – மாவட்டச் செயலகக் கூட்டத்தில் செல்வராசா கஜேந்திரன் தெரிவிப்பு



- நடராசா லோகதயாளன்

அரசாங்கக் கூட்டம் ஒன்றில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் கலந்து கொண்ட தனக்கு, அந்தக் கூட்டத்திலேயே கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவட்டச் செயலகத்தில் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்களான ஆளுநர. பி.எஸ்.எம்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் வியாழக்கிழமை (28) அன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வராசா கஜேந்திரன், சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத்தலைவர் சி வி கே சிவஞானம், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், பொலிஸ் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோர் பங்குபெற்றனர்.

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடியால் ஏற்படும் பிரச்சனைகள், அதைத் தடுக்க முடியாமல் இலங்கை அரசு திணறுவது, வடக்கு மாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுவது ஆகியவை இந்தக் கூட்டத்தில் முக்கியமான விவாதிக்கப்பட்டன.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் இலங்கை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடையே காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது. அந்த சமயத்தில் இருதரப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

இதன்போது யாழ்ப்பாணம் மீனவ சம்மேளண உப தலைவர் பிரான்சிஸ் இரட்ணகுமார் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனை நோக்கி ஒருமையிலும் வன்சொற்களைப் பயன்படுத்தியவாறும் நெருங்கிய சமயமே நாடாளுமன்ற உறுப்பினர் தனக்கு அந்தக் கூட்டத்திலேயே “கொலை மிரட்டல்” விடுக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

“கட்சிக்காரரை கொண்டு வந்து ஒருங்கிணைப்புக் கூட்டத்தை கட்சிக் கூட்டமாக மாற்ற வேண்டாம். அத்தோடு எமக்கு இது கொலை அச்சுறுத்தல்” எனத் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அந்துமீறல் காரணமாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின்போது செயலகத்தில் ஓர் கலவர நிலை ஏற்பட்டது.

இதன்போது யாழில் தொடரும் இந்திய மானவர்களின் எல்லை தாண்டல் காரணமாக உள்ளூர் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டிய சமயம் இதனைத் தடுக்க “இரு வழிவகைகளை தான் ஆலோசணையாக முன் வைப்பதாகவும் அதில் ஒன்று வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரும் கூட்டாக இந்தியா சென்று பேச முன்வருமாறு அழைத்தபோதும் ஐவர் மட்டுமே அதற்கான ஒப்புதலை தெரிவித்துள்ளனர் எஞ்சிய நால்வரும் இதுவரை பதிலளிக்கவில்லை” என அமைச்சர் குறிப்பிட்டார்.



இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கருத்துரைக்கையில், “சாதாரண டெங்கு நுளம்பு விடயத்திற்கு சட்ட நடவடிக்கை, ஆனால் இந்திய மீனவர் விடயத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களா சென்று பேச வேண்டும். அவ்வாறானால் கடற்படையினர் எதற்கு அவர்கள் மக்களின் நிலத்தை பிடித்து குந்தியிருக்கின்றனர். கடற்படையினர் வெளியேறட்டும் நாம் சென்று பேசுகின்றோம் அல்லது அரசும் அரச அமைச்சரும்தான் அதற்கு தீர்வு காண வேண்டும்” என அவர் கூறிய சமயம் “கடற்படையினர் நடவடிக்கை எடுக்கின்றனர் இருப்பினும் போதாது இதில் அரசும் அமைச்சரும் உரிய தீர்வை எட்ட வேண்டும். நாம் சென்று பேசுவதானால் பேசுகின்றோம் அமைச்சர் பதவியிலிருந்து விலகுங்கள்” என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

இவ்வாறு இணைத் தலைவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டபோது வடமராட்சியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மீனவ சம்மேளண உப தலைவர் பிரான்சிஸ் இரட்ணகுமார் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனை ஒருமையில் விளித்ததோடு “நீ, நான், வெளியே வா பார்ப்போம், நான் வடமராட்சியான் நீ வன்னியான்” எனப் பிரதேச வாதங்களையும் கிளறி கடும் சண்டித் தனத்தில் ஈடுபடுவதையும் அரங்கிலிருந்தவர்கள் கண்டனர்.

இவ்வாறு ஓர் அமைப்பின் பிரதிநிதி நாடாளுமன்ற உறுப்பினரை தகாத வார்த்தைப் பிரயோகங்களில் கூறியபோதும் இணைத் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் அதைக் கண்டிக்காமல், சண்டித்தனத்தில் ஈடுபட்டவருக்குச் சார்பாக கருத்து தெரிவித்துக்கொண்டிருந்த அதே நேரம் இரண்டாவது இணைத் தலைவரான ஆளுநர் வேடிக்கை பார்த்தவாறு அமர்ந்திருந்தார்.

# கனடாவில் பாவலர் பாலரவியின் கவிதை நூல்கள் வெளியீட்டு விழா

- குரு அரவிந்தன்

இங்கிலாந்தில் இருந்து வருகை தந்திருந்த பாவலர் பாலரவியின் கவிதைத் தொகுப்புக்கள் 24-12-2023 ஆம் ஆண்டு ஸ்காபரோவில் உள்ள 110, “அயன்சைட் கிறிசென்ட்” மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் “தெளிந்தபின் தெளிந்தவை”, “எண்ணங்களின் வண்ணங்கள்”, “வாழ்வாங்கு வாழ்ந்தோர்க்கும் வாழ்வோர்க்கும் வாழ்த்துக்கள்”, “தேசமேயாகிய சுடர்கள்”, ஆகிய நான்கு கவிதைத் தொகுப்புக்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.



இந்த நிகழ்வுக்கு கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் கவிஞர் அகணி சுரேஸ் அவர்கள் தலைமைதாங்கினார். வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்கள் தனது உரையில் கவிஞர் பாலரவியின் தங்கை சசிகலா தனது மாணவி என்றும், புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ் வளர்க்கும் இவர்களைப் போன்றவர்களின் தன்னலமற்ற சேவை பாராட்டப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் துணைத்தலைவர் குரு அரவிந்தன் தனது உரையில்



பாவலர் பாலரவி அவர்களை 2018 ஆம் ஆண்டு முதன் முதலாகச் சந்தித்தாகவும், கனடாவில் புலம்பெயர்ந்த தமிழர்கள் கடந்த 33 வருடங்களாகத் தமிழ் மொழியை வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டிருப்பதைப் போலவே பிரித்தானியாவிலும் பாவலர் பாலரவி போன்றவர்கள் தமிழ் மொழியைத் தக்கவைப்பதில் ஈடுபட்டிருப்பதையும், அங்கே அச்சகம் ஒன்றை நடத்தி அதன் மூலம் தமிழ் நூல்களை வெளியிட்டுத் தமிழ்த் தொண்டு ஆற்றுவது பற்றியும் குறிப்பிட்டார்.

ஒன்றாறியோ மாகாணசபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் மாகாணசபை சார்பாக வாழ்த்துத் மடல் கொடுத்து வாழ்த்தினார். கனடா கவிஞர் கழகத் தலைவர் குமரகுரு, மற்றும் கவிஞர் கஜன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

அகணிசுரேஸ் அவர்கள் தனது தலைமை உரையில் கனடா எழுத்தாளர் இணையம் இது போன்ற நூல்களை வெளியிட்டு, எழுத்தாளர்களை ஊக்குவித்து வருவதையும், முடிந்தளவு தமிழ் இலக்கிய நூல்களை ஆவணப்படுத்துவதில் முன்னிற்பதாகவும் குறிப்பிட்டார்.

நூல் அறிமுகவுரை, ஆய்வுரை ஆகியவற்றை வாசுகி நகுலராஜா, நகுலேஸ்வரி குமரகுரு, வைத்திய கலாநிதி மேரிகியூரி ஜோசெப், பவானி தர்மகுலசிங்கம், கவிஞர் கஜன், ராஜ்மீரா இராசையா, சிவவதனி பிரபாகரன், மாவிலிமைந்தன் சண்முகராஜா ஆகியோர் வழங்கினார்கள்.

ஏற்புரையில் பாவலர் பாலரவி அவர்கள் அவ்வப்போது தான் எழுதிய கவிதைகளைத் தன்னிடம் அச்சகம் இருந்ததால் நூல்களாக்க முடிந்ததாகவும், இளமைப் பருவத்தில் எழுதிய கவிதைகள் அத்தனையும் 1983 ஆண்டு இலங்கையில் நடந்த இனக்கலவரத்தில் அழிக்கப்பட்டு விட்டதாகவும் குறிப்பிட்டார்.

பாவலர் பாலரவியின் சார்பாக அவரது சகோதரிகளான திருமதி. ரஜனி சதானந்தன், திருமதி. கிரிஜா மோகனதாஸ் ஆகியோர் நன்றியுரை வழங்கினார்கள். நிகழ்ச்சிகளை அவரது சகோதரி சசிகலா



ஜீவானந்தன் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

குருவடி சரணம் ஓம் சக்தி திருவடி சரணம்

மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

புதுவருடத்தை முன்னிட்டு சிறப்பு பூசை

80, Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario

(416) 436-9647

ஆதிபராசக்தி குரு மன்றத்தில் 01-01-2024 திங்கட்கிழமை காலை 8:30 தொடக்கம் தொடர்ந்து சிறப்பாக பூசை நடைபெறவுள்ளது.

அனைத்து சக்திகளையும் அன்புடன் அழைக்கின்றனர்.





# கண்ணீர் அஞ்சலி!

## கண்ணில்லாக் காலனவன் கவர்ந்து சென்ற எங்களின் சந்தியா!

கனவா நனவா கண்ணில்லாக் காலனவன் கவர்ந்து சென்றுவிட்டானா உன் உயிரை? நம்பமறுக்கிறது நம் நெஞ்சம். கடந்த வியாழன் அன்று எம்மிடம் விடைபெற்று எத்தனை மகிழ்வாய் ஏகினாய் யமேக்கா. எவர் கண்பட்டதுவோ என்ன நேய் வந்ததே இன்றுநீ எங்களோடு இல்லை. கண்ணீர் விட்டுக் கதறியழுகின்றோம். வானொலிக்கு வந்து நீ வழங்குகின்ற "சண்டே மசாலா" நிகழ்ச்சி கேட்க காத்திருக்கும் நேயர்கூட்டம் கண்ணீர் விட்டழுதே கலங்கி நிற்கிற ஆற முடியவில்ல அழுதும் தான் தீரவில்லை தேடி உன்னைத் தினமும்தான் அலைகின்றோம்.

நீண்ட காலம் நீ வானொலியில் நீ வாசம் செய்திருந்தாலும் எங்கள் யுகம் வானொலில் வந்து இணைந்து ஆண்டுகள் நான்குதான் ஆனாலும் நாற்பதாண்டு நட்புடன் எங்கள் நேயர்களின் நெஞ்சங்களில் நிலையான இடம்பிடித்தாய் உந்தன் கலகலப்பான பேச்சும் கணீர் என்ற குரல் வளமும் கொண்டு எங்களை ஆட்கொண்ட அன்பின் திருவுருவே ஆனந்தத்தின் உறைவிட மே திரும்புகின்ற இடமெங்கும் உந்தன் திருமுகமே தெரியுதம்மா எப்போது வருவாய் என்று எண்ணி மனம் துடிக்கும். மீண்டும் ஒரு முறை காற்றலையில் உந்தன் குரல் காந்தமென எம்மைக் கவர்ந்திலுக்க மாட்டாதா?

**ஏங்கும் இதயங்களுடன் யுகம் வானொலி, அனைத்துலக தமிழ் வானொலி கலைஞர்களும், நேயர்களும்...**

மண்ணில்: **15-01-1961**
விண்ணில்: **22-12-2023**



**திருமதி. சந்தியா கிட்ணசாமி**

துயர் பகிர்வு

தோற்றம் — மறைவு



January - 15 1961 — December - 22 - 2023

திரு.திருமதி! கிட்ணசாமி நாகலட்சுமி
அவர்களின் அன்பு புதல்வி
திருமதி : **சந்தியா கிட்ணசாமி** (CANADA)

**பிள்ளைகள்**

ஹறிஷ் மனோகரன்
தினேஷ் மனோகரன்
லக்ஷ்மி பிரான்சிஷ்
பிறிதுவிஷ் கான்சிஷ்டஷ்
சித்றாங்கி புறோகித்
வைஷ்ணவி கிட்னசாமி

ஜிலாஸ் பிரான்சிஸ் (மருமகன்)

**பேரப்பிள்ளைகள்**

லியம் பிரான்சிஷ்
செயின் பிரான்சிஷ்
யாறா றோகித்
லொறென்சோ மனோகரன் லின்ச்
மீறா பிறான்சிஷ்
லயிலா புறோகித்

செற்று புரோகித் (மருமகன்)

................ MEMORIAL SERVICE ................

**Visitation**
Sunday - December, 31,2023
1:00PM - 3:00PM

**Funeral service**
Sunday - December, 31,2023
3:00PM - 5:00PM

Ajax Crematorium & Visitation Centre
384 Finley Ave, Ajax, Ont, L1S 2E3
Contact Ph: Chithra - 647 382 0305

# 10ம் ஆண்டு நினைவஞ்சலி

**மண்ணில்:** 09-04-1928

**விண்ணில்:** 03-01-2014



**அமரர். அற்புதம்மா சந்தியாப்பிள்ளை**

நினைவுகள் என்றும் அழியவில்லை அம்மா
உலகில் தேடி தேடி மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம்
எம்மை நீங்கள் சுமந்த கருவறைதானம்மா
உலகில் எம்மை அறிமுகம் செய்தாய் அம்மா
உலகெங்கும் எம்மை வாழ வழியமைத்தாய் அம்மா
உலகம் முழுவதும் தேடினாலும், அகராதியைப் புரட்டினாலும்
நீங்கள் காட்டும் பாசத்திற்கு விலைமதிப்புண்டோ அம்மா
ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும் அம்மா என்கின்ற
உறவு இல்லை என்றால் நாம் அனாதைகள் தானம்மா
கோடி உறவுகள் அருகில் இருந்தும் அம்மா
உங்களை மிஞ்சிய உறவேதும் உலகில் இல்லை
நாம் முதலில் பேசிப் பழகியதும் உங்கள் பெயர்தானம்மா
நாம் முதலில் எழுதப் பழகியதும் உங்கள் பெயர்தானம்மா
சூரியன் உதிக்க மறக்கலாம் அம்மா
இரவு பகலாகாமல் விடலாம் அம்மா - ஆனால்
நாம் என்றுமே உங்கள் நினைவுகளை மறவோம் அம்மா...

**என்றும் உங்கள் நினைவுடன் வாழும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

தகவல்: உதயன் (மகன்)
(416) 843-0589


19th January Friday 2024 7PM

செந்தில் குமரனின் நிவாரணம் அமைப்பு பெருமையுடன் வழங்கும்
பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதய தெய்வம் எம்.ஜி.ராமச்சந்திரன்
அவர்களின் வாழ்வை கொண்டாடும் முகமாக

SCAN ME

# MGR 107

மாபெரும் இன்னிசை விருந்து

Metropolitan Centre
3840 Finch Ave East
Scarborough

அவர்களின் அட்டகாசமான பாடல்களுடன், அவரின் சில அபிமான நடிகர்களின் முத்தான பாடல்களையும்
பாடி உங்களை மகிழ்விக்க ஆவலோடு உள்ளோம். வருகை தந்து உயிர்கள் காத்திடுவீர்





Life-Saving Surgeries | Hospital Equipments | Livelihood Assistance | Mobile Medical Clinic

416-200-7652, 647-526-7652 www.Nivaranam.com $30, $60, $100

திரட்டப்படும் நிதி முழுவதும் தாயகத்தில் நலிந்த நோயாளிகளின் இருதய – சிறுநீரக் சத்திரசிகிச்சைகளுக்காகவும், மருத்துவ கட்டுமானங்களுக்காகவும், கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடமாடும் மருத்துவ சேவைக்காகவும், வாழ்வாதர உதவிகளுக்கும், இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.

100% of proceeds will be used for projects without any expenses deducted

முழு நிதி விபரங்களும் சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் | Thanks to all our Media Partners

செந்தில் குமரனின் நிவாரணம் (கனடா)

FREE PARKING

tvi HD LANKASRI தமிழ்வின் IBC தமிழ் Cineulagam — Our Digital Partners — east CKR உதயன் Seithy குரல்


HIGH SKY CANADA
Visitor visas, Study visas, and Work Visas Applications
Convert to WORK PERMIT from other status (Visitor)
PR and Citizenship Application
IELTS/ CELPIP/ CAEL Preparation
Traffic Tickets and Pardon
Tutoring for Students- ALL SUBJECTS, including TAMIL
CONTACT NOW!
Phone number/WhatsApp:
+1 (437) 365-5668
Email: highskycanada@gmail.com


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160

# இவரே உண்மையான 'கேப்டன்'!

- சிவா பரமேஸ்வரன்

**தி**றமையாக வழிநடத்துபவர்களையே "கேப்டன்" என்று அழைப்பது வழக்கம். அந்த சொற்றொடர் பெரும்பாலும் விளையாட்டு அணிகளுக்கு தலைமை ஏற்பவர்களுடன் தொடர்புகொண்டது. ஏனென்றால் அவர் ஒரு அணியை வழிநடத்திச் சென்று வெற்றிப்பாதையில் செலுத்தி தளராமல் உறுதியாகக் கடைசிவரை நிற்க வேண்டும். வெற்றி தோல்விகளைக் கண்டு தளராமல் இருப்பவரே "கேப்டன்" என்ற அடைமொழிக்குப் பொருத்தமானவர்.

அப்படி இருந்தார் விஜயகாந்த். அதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. மென்மையானவர் ஆனால் உறுதியானவர். எளிமையான பின்புலத்திலிருந்து திரைத்துறைக்கு வந்தவர். அவர் யாருக்கும் போட்டியாக திரைத்துறைக்கு வரவில்லை.



அவர் திரைதுறைக்கு வந்த சமயம் கமல்ஹாசன் மற்றும் ரஜினிகாந்த் என்ற இரு பெரும் துருவங்கள் ஆளுமை செலுத்தி வந்தனர். அவர்கள் இருவரும் பரபரப்பாக இருந்த சமயத்தில் அவர்களுக்கு அப்பாற்பட்டு திரைத்துறையில் தனக்கென்று ஒரு இடத்தை ஏற்படுத்திக்கொண்டு பிரகாசித்தவர் விஜயகாந்த். வித்தியாசமான நடிப்பு, நகைச்சுவை மற்றும் கம்பீரம் கலந்த ஒரு கதாநாயகனாக அவரால் பரிமளிக்க முடிந்தது. கமல், ரஜினி இருவரும் நிராகரித்த அல்லது நடிக்க விரும்பாத கதாபாத்திரங்களை அவர் விரும்பி ஏற்று அதில் சாதித்தும் காட்டினார்.

அவரை கருப்பு எம் ஜி ஆர் என்று அவரது ரசிகர்கள் அன்புடன் அழைத்தது ஏற்புடையதாகவே இருந்தது. அவரிடமிருந்த தயாள குணங்கள் இவரிடமும் இருந்தது. அவரை பார்க்கச் சென்றவர்கள் பசியாறாமல் திரும்பவில்லை என்று பல கூற நான் கேள்விப்பட்டுள்ளேன். படங்களைக் குறித்த நேரத்தில் முடித்துக் கொடுப்பது, தயாரிப்பாளர்கள் நெருக்கடியை உணர்ந்து செயல்படுபவர், கீழ்மட்டத் தொழிலாளர்களை அரவணைத்துச் செல்பவர் என்று அவரைப்பற்றி பெருமையாகவே அனைவரும் பேசுகின்றனர்.

அவருடைய நிர்வாகத்திறமைக்கு எடுத்துக்காட்டாக நடிகர் சங்கத்தின் கடன்களை அடைத்ததைச் சொல்லலாம். அந்தச் சங்கம் மீண்டும் கடனில் மூழ்கியுள்ளது என்பது வரலாறு. அடுத்தவரின் சிரமத்தை உள்வாங்கி அதிலிருந்து அவர்கள் மீள்வதற்கு வழிவகுத்துக் கொடுப்பவரே ஒரு தலைவர் அதுவே தலைமைப் பண்பு. அவர் யாரையும் போட்டியாகக் கருதவில்லை, தன்னம்பிக்கை மற்றும் உழைப்பு ஆகியவற்றையே அவர் தமது அடிப்படை பலங்களாகக் கொண்டிருந்தார்.

இன்று பல பிரபல இயக்குநர்களை ஆரம்பக்காலத்தில் தூக்கிவிட்டவர் விஜயகாந்த். திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கு அவர் பக்கபலமாக நின்றார். அவரால் ஏராளமானோர் வாழ்ந்தனர்.

அதிரடியாக அரசியலிலும் கால்பதித்த அவரை மக்கள் ஏற்றனர். தமிழ்நாடு சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர் உயர்ந்தார். ஆனால், அரசியல் எனும் சதுரங்க விளையாட்டில் காய்களைச் சரியாக நகர்த்துவது மிகவும் சவாலானதும் சிக்கலானதும் என்பதை அவர் சற்று கணிக்கத் தவறிவிட்டார். உண்மையில் அவரை ஆசைகாட்டி மோசம் செய்துவிட்டனர் என்பதே உண்மை.

தமிழ்நாட்டில் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் முக்கியமானது. 1984ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவ்வாறு யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அந்தப் போட்டி மிகவும் கடுமையானதும் சவால்கள் நிறைந்தது, ஊழல் குற்றச்சாட்டுக்கள், தண்டனைகள் போன்றவைகளுக்கு மத்தியில் இடம்பெற்றது.

மீண்டும் எப்படியாவது ஆட்சிக்கு வரவேண்டும் என்று திமுகவும், ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டால் மட்டுமே கட்சியையும், தன்னையும் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்ற நிலையில் அதிமுகவும் இருந்தன. அந்த தேர்தலில் கூட்டணி அமைப்பதில் திமுக மற்றும் அதிமுக மிகுந்த கவனம் எடுத்தன. கூட்டணிக் கட்சிகளுக்கு கூடுதலாக இடம் ஒதுக்காமல், தாமே அதிக இடங்களில் போட்டியிட வேண்டும் என்று இந்த இருபெரும் கட்சிகளும் முடிவெடுத்தன.

இந்த நிலையில், சுயலாப அரசியலை மையமாக வைத்து, இந்த இரு கட்சிகளாலும் சேர்க்கப்படாத இதர கட்சிகள் விஜயகாந்துக்கு ஆசைக்காட்டி அவருடன் கூட்டணி அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தன. வைகோவின் மதிமுக, திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள், வலது மற்றும் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் ஆகிய கட்சிகளை திமுக, அதிமுக ஆகியவை கழற்றிவிட்டன. அவர்கள் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள விஜயகாந்திற்கு முதலமைச்சர் பதவி என்ற ஆசையைக் காட்டின.

2016 சட்டமன்ற தேர்தலில் திமுக, அதிமுகவுக்கு போட்டியாக மாற்று அரசியலை முன்வைத்த மக்கள் நலக் கூட்டணி உருவாகியிருந்தது, மதிமுக, இடதுசாரிகள், விசிக மற்றும் தமாகா போன்ற கட்சிகள் இருந்த அந்த அணி விஜயகாந்துக்கு 2015 நவம்பரில் அழைப்பு விடுத்தது. முதலில் மறுப்பு தெரிவித்த விஜயகாந்த் பின் மக்கள் நல கூட்டணியில் இணைந்தார். ஆனால் மக்கள் நல கூட்டணிக்கு தோல்வியே மிஞ்சியது.

முதலமைச்சர் பதவி என்ற ஆசையைக்காட்டி வெற்றி பெற முடியாத ஒரு கூட்டணிக்கு அவரைத் தலைவராக்கிவிட்டு, தேர்தலுக்குப் பின்னர் அவரை இதர கட்சியின் தலைவர்கள் கழற்றிவிட்டனர் என்பது கசப்பான உண்மை. அந்தச் சறுக்கலிலிருந்து அவர் மீளவில்லை.

தமிழகத்தில் திமுக, அதிமுக ஆகிய இருபெரும் கட்சிகள் மற்றும் அதன் தலைவர்களுக்கு அப்பாற்பட்டு ஒரு மாற்று அரசியல் சக்தியாக வேகமாக வளர்ந்த அவரால், அந்த இடத்தை தக்கவைத்துக்கொள்ள முடியாமல் போனது துரதிஷ்டமே. தமிழக சட்டசபையில் அவரது பணி பாராட்டும்படியாகவே இருந்தது சட்டமன்றத்தை அவர் துணிச்சலாக எதிர்கொண்டார். அது மக்களிடையே ஒரு நம்பிக்கை மற்றும் அவர் மீது ஒரு பற்றை ஏற்படுத்தியது. எனினும், அரசியல் பாதையில் அவரால் நீண்ட தூரம் செல்ல முடியவில்லை.

பல கட்சிகள் போன்றே அவரது கட்சியும் குடும்ப அரசியலில் சிக்கியது துர்ப்பாக்கியமே. அவர் தொடங்கிய தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தில் அவரது மனைவி மற்றும் மைத்துனரின் ஆதிக்கம் அதிகரித்தது. அவரது உடல்நிலை காரணமாக, கட்சியை அவ்விருவரும் தமது கட்டுபாட்டில் கொண்டுவந்தனர். மனைவிக்கும் மைத்துனருக்கும் இந்திய நாடாளுமன்ற மேலவையில் உறுப்பினர் பதவி தர வேண்டும். இருவரில் ஒருவரை மத்திய அமைச்சராக்க வேண்டுமென்றால் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

இதனால், மாநில மற்றும் தேசியக் கட்சிகள் தேமுதிகவை புறக்கணிக்க ஆரம்பித்தன. இதையடுத்து கட்சி மெல்ல பலவீனமடையத் தொடங்கியது.

அவருடைய ஆதரவுடன் சட்டமன்றம் சென்ற பலர் அவரை விட்டு விலகினர். அது அவரை உடல் மற்றும் உளரீதியில் பாதித்தது. அவர் அரசியலில் தீவிரமாக இருந்தவரை எவ்விதமான குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகாமல் இருந்தார். சாக்கடை அரசியலில் அவ்வாறு இருந்தது பாராட்டுக்குரியது. அந்த வகையில் அவர் ஊழல் வலையில் சிக்காமல் இருந்தார்.

அண்மையில் கூட அவரது மனைவி யதார்த்தத்திற்கு ஒத்துவராத சில அறிக்கைகளை விட்டிருந்தார். அதாவது தமது கட்சிக்கு யார் இந்திய நாடாளுமன்ற மேலவையில் ஒரு உறுப்பினர் பதவி அளிக்க முன்வந்து, விஜயகாந்தை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களுடன் தான் தமது கட்சி கூட்டணி அமைக்கும் என்றார். இது நகைப்புக்குரியாத மட்டுமின்றி, நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்று என்று அனைவருக்கும் தெரியும். அழுத்தம் கொடுக்கும் அரசியலை அவரது குடும்பத்தினர் முன்னெடுக்க முயன்று தோல்வி கண்டனர்.

இன்று ஒரு மாற்று அரசியலை முன்னெடுத்து அதில் ஓரள்விற்கு சாதித்துக் காட்டிய விஜயகாந்தின் கட்சி அவருடனேயே இல்லாமல் போகும் என்பதே யதார்த்தம். ஆனால் தனிப்பட்ட பண்புகள் காரணமாக அவருக்கு என்றும் சமூகத்தில் ஒரு இடம் இருக்கும்.

அந்த வகையில் உண்மையில் அவர் ஒரு "கேப்டன்".

---

## தமிழ் மரபுத் திங்கள்
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

மரபுத் திங்களை மகிழ்வுடன் கொண்டாட
கரங்கள் கோர்த்தே களத்திலே இணைவோம்
தமிழனின் பெருமையைத் தரணியில் இயம்பியே!
அமிர்தத் தமிழை அரியணை ஏற்றுவோம்
உழவர் திருநாளை உலகறியச் செய்தே!
உழவுத் தொழிலுக்கு உன்னதம் சேர்ப்போம்
பொங்கல் விழாவைப் பொறுப்பாய்ச் செய்தே!
மங்காத் தமிழன் மரபு காப்போம்
முத்தாய் எமக்கு மூத்தோர் தந்த
முத்தமிழும் மூவேந்தர் கதையும் சிலம்பும்
ஆய கலைகள் அறுபத்து நான்கையும்
தேய விடாமல் திடமாய்க் காப்போம்
திருக்குறள் தேவாரம் திருவெம்பா திருக்கோவை
அரும்பெரும் காப்பியம் ஐந்துடன் ஆத்திசூடி
பருப்பொடு சதிபோல் பாலகர் விரும்பி
கருத்தொடு கற்றிடக் களத்தைக் கொடுப்போம்.
பாரம் பரிய பண்பாட்டு விழுமியம்
காரம் குறையாக் கண்ணாய்க் காப்போம்
கிட்டிபுள் கிளித்தட்டு கும்மி கோலாட்டம்
சிட்டான சிறார்க்குச் சிந்தையில் ஏற்றுவோம்
சொக்கட்டான் எட்டுப் பெட்டி சிலம்பம்
கொக்கான் வெட்டுதல் கெந்திப் பிடித்தல்
பொம்ம லாட்டம் போன்ற செயல்களை
செம்மை குறையாமல் செவிகளில் சொல்வோம்
"பொங்கு தமிழுக்குப் பங்கம் விளைந்தால்
சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு"
பாரதி தாசனின் பாடல் வரிகளை
பாரெலாம் ஒலித்திட பாதை அமைப்போம்
சோர்விலா இனமாய்த் துலக்கம் பெற்றிட
சாரங்கன் தாள்பணிந்து சபதம் எடுப்போம்
அதிசயிக்கும் அறிவியலை அன்றே கொடுத்த
அதிரசமாய் நாவில் அசைந்திடும் தமிழே!
முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த
பச்சைத் தமிழர் பாரினில் நாங்கள்
கதிரோடு ஆடும் கழனி போலவே
சதிராடும் எங்கள் எண்ணத்திற் தமிழே!
அங்கமாய் எம்முள் ஆகிவிட்ட மொழியை
பங்கம் வராமல் பார்த்துக் கொள்வோம்.
அக்கரை நாடிருந்து அகதியாய் வந்தாலும்
இக்கன டாவிலும் தொலைக்கா இனமேநாம்
நன்னெறியை உலகிற்கு நயந்த நற்றமிழே!
என்றும் உன்னுடன் இனிமையாய்ப் பயணிப்போம்
வாழ்க்கையை வகுத்துக் காட்டிய மொழியை
வீழ்ந்து விடாமல் வீச்சுடன் காப்போம்
எங்களை உலகிற்கு எடுத்துக் காட்டியது
தங்கம் போன்ற தரமான தாய்த்தமிழே.
உலகில் மூத்த மொழியாய் உதிர்த்து
பலரும் போற்றும் பண்பான மொழியெமதே
எங்கள் தாய்மொழி தமிழென இயம்புவோம்
சங்கத் தமிழென சந்ததிக்குச் சொல்வோம்

முத்தாக நாவில் விளையாடும் முத்தமிழை
சொத்தாக எண்ணிச் சரித்திரம் படைப்போம்
நித்திரைப் பொழுதுகள் நெருங்கும் போது
சித்திரக் கதைகளைச் சிறுவர்க்குச் சொல்வோம்
நமக்கென நாடு இல்லாத போதிலும்
தமிழைத் தொலைக்காத் தலைமுறை நாங்கள்
வீழாது ஒருநாளும் எங்கள் வீரத்தமிழ்
வாழ்க தமிழினமே வளர்க தமிழ்மொழியே!

(எல்லா மொழியும் கற்றுக்கொள் எம்மொழியில்
பற்றுக்கொள்.)

---

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

- நடராசா லோகதயாளன் -

# 'தலைமையேற்க இன்னும் தகுதிகள் வரவில்லை' – சாணக்கியன் MP தெரிவிப்பு



"இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக வருவதற்கு பல தகுதிகள் இருக்க வேண்டும். அந்த தகுதி இன்னும் எனக்கு வரவில்லை, இப்போது கற்றுக்கொண்டிருக்கிறேன்" என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பது தொடர்பாகவும் கட்சிக்குள் கூட்டாக இணைந்து செயற்படுவது தொடர்பாகவும் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு தொடர்ந்து அவர் பதிலளிக்கையில்:

"ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பாக ஒருவரை நியமிப்பது பற்றி கூட்டத்தில் தீர்மானித்த பின்பே முடிவு எடுக்கப்படும். கடந்த 10 வருடங்களாக அரசியலில் அவதானிப்பவர்களுக்கு, யார் அடுத்த தலைவர் என்பது பற்றி தெரியும். தமிழ் மக்கள் ஏங்கி கொண்டிருப்பது ஒரு அரசியல் தீர்வு வேண்டும் என்பதாகும். எங்களுடைய பல பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினூடாகவே தீர்வு காண முடியும். அதாவது அதிகார பகிர்வினூடாக மட்டுமே எங்கள் பிரச்சினைகளை தீர்க்க முடியும். டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக வடக்கில் இருக்கிறார். அவரால் வடக்கில் பிரச்சினை மட்டுமே இருக்கிறது. அவரால் அவருடைய துறை சம்பந்தமான பிரச்சினையை மட்டுமே கையாள முடியும். ஏனைய பிரச்சினைகளை எவ்வாறு அவரால் தீர்க்க முடியும்? ஆகவே எங்களுக்கு அதிகாரங்கள் கிடைத்தால் நாங்களே எங்கள் பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

அரசியல் தீர்வுக்காகவே எங்கள் கட்சி செயற்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆகவே அரசியல் சம்பந்தமாக பரந்த அறிவு ஆழமாக இருக்க வேண்டியது அவசியம். இதை தெரிந்த ஒருவர் தான் தலைவராக வரமுடியும்.

இவ்வாறான விடயங்களை நாங்கள் முன்வைக்கும் போது சர்வதேச ரீதியாக நாங்கள் ஆதரவை திரட்ட வேண்டும். சர்வதேச தொடர்புகள் இருந்தால் தான் மாற்றங்களை செய்ய முடியும். அத்தோடு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களையும் கொடுக்க முடியும். மொழி மட்டும் சர்வதேச தொடர்பில் ஆதிக்கம் செலுத்துவதில்லை. விடயங்களும் தெரிந்திருக்க வேண்டும் அதன் மூலமாக நாங்கள் ஆதரவை எடுத்து நடைமுறைப்படுத்துவதும் முக்கியமாகும். இந்த 2 தகுதிகளும் தலைவருக்கு அவசியமாகும்.

அவ்வாறான தகுதி என்னிடம் இருந்தால் நானே தலைவர் பதவிக்கு குதித்து விடுவேன். இன்னும் 5 அல்லது 10 வருடங்களில் எனக்கும் அந்த தகுதி வரலாம். நான் எனது பெயரை ஏன் கொடுக்கவில்லை என்றால், எனக்கு தகுதி இன்னும் வரவில்லை. நான் இன்னும் கற்றுக்கொண்டு இருக்கிறேன். எனவே தமிழரசுக்கட்சியின் தலைவராக யார் வரவேண்டுமென்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறான சூழலில் தனது தலைவரை தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பம் ஒவ்வொரு பகுதியில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் கிடைத்துள்ளது. எங்களுடைய கட்சி எங்கள் பிரதேசத்தில் பிளவுபடாமலே செயற்பட்டுக் கொண்டு இருக்கிறது. கட்சிக்குள் நடக்கும் விடயங்கள் கட்சிக்குள் பிளவு என்பது அல்ல. அனைவரும் நிலைமைகளை புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்". என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது. அந்தப் பதவிக்கு தற்போது யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோருடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனும் களத்தில் உள்ளனர்.

எனினும், இதில் சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோரிடையே தான் போட்டி நிலவுவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். எனினும் இறுதி நேரத்தில் இவர்களில் ஒருவர் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளக் கூடும் எனவும் சில தகவல்கள் தெரிகின்றன.

தற்போது கட்சியின் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜா இத்தேர்தலில் போட்டியிடவில்லை.




OM NAMO NARAYANA



## 125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

### பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.




# யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள வீடு உரிமையாளரது ஆனால் அதில் பொருத்தப்படும் சூரிய மின்கலம் அவருக்கு சொந்தமில்லை

"இது எப்படி இருக்கு" கதை தான் இதுவும்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள வீடுகளின் மேல் பொருத்தும் சூரிய மின்கலம் வீட்டு உரிமையாளர்களிற்கு சொந்தம் இல்லை என்ற செய்தி இப்போது வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள 50 லட்சம் ரூபா பெறுமதியான 25 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டாலும் அதன் உரிமை ஒர் தனி நிறுவனத்திற்கு சொந்தமாக இருக்கும் ஆபத்துள்ளதாக தெரிவித்து அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

அதாவது வீட்டில் இருக்கலாம், ஆனால் வீடு சொந்தமில்லை என்ற அடிப்படையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ள நிலையில், வியாழக்கிழமை (28) அன்று யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் வெடித்தது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்களான ஆளுநர. பி.எஸ்.எம்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ஓர் நிறுவனம் ஊடாக 25 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் அதில் 3 மில்லியன் ரூபா பெறுமதியில் வீடும் 2 மில்லியன் ரூபாவில் சூரிய மின்கலமும் என்ற வகையிலேயே 5 மில்லியன் ரூபாவாகும் என ஆளுநர் தெரிவித்தார்.

"சூரியகல வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் ஏற்பட்ட தாமதம் பட்டியலை தயாரிக்கவும் தாமதம் ஏற்பட்டது. இதேநேரம் தற்போது யாழிற்கு 16 ஆயிரத்து 500 வீடுகள் வேண்டும். இந்த வீட்டு வசதிக்காக தேசிய வீடமைப்பு வீடு 830 உம் காணி இருந்தும் வீடு அற்றவர்களின் பட்டியலும் இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது" என மாவட்ட அரச அதிபர் சிவபாலசுந்தன் தெரிவித்தார்.

இதன்போது கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் "அமைக்கப்படவுள்ள வீடுகளின்மேல் சூரிய மின்கலமும் பொருத்தப்படவுள்ளது. அவ்வாறு பூட்டிய சோலாரின் மின்சாரம் நிறுவனத்திற்கே சொந்தம் இந்தப் பிரச்சணை தொடர்பில் ஏன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசவில்லை" என கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கதைக்கவில்லை என்பது எனக்குத் தெரியாது எனக் கை விரித்தார் ஆளுநர்.

"என்ன தெரியாது என்கின்றீர்கள் இது தொடர்பாக நானே நேரடியாக உங்களிற்கு கடிதம் எழுதியுள்ளேன். அதற்கு பதில்போட்ட நீங்கள் எவ்வாறு தெரியாது எனப் பதிலளிக்கின்றீர்கள்?" என மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரிய போது சமயம் இவற்றின் காரணமாகவே வீட்டுத் திட்டப் பட்டியலை தயாரிக்க முடியவில்லை என்று பதில் வந்தது.

இதை அனுமதிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வலியுறுத்தினார்.

இதனால் வீட்டுத் திட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி மீண்டும் கலந்துரையாடி தீர்மானிப்போம் என ஆளுநர் தெரித்தார்.

## கடந்தவையும் கடப்பவையும் - (82)

வண்டியில் இருந்தபடி அன்னதானக் கந்தனவன் - அன்று
கொண்டிருந்த வடிவழகைப் பார்த்தவுடன்

நெஞ்சுருகிப் போனோம் வந்தவர் அனைவருமே - அங்கு
எங்கு பார்த்தாலும் மணவாளக் கோலம்தான்

'ஒன்றல்ல இரண்டல்ல இருபதுக்கு மேல்
இங்கின்று திருமணம்' என்றவர்

விரைவாக இறங்கும்படி அவசரப்படுத்தவே
விரைந்துதான் இறங்குகிறோம் ஒவ்வொருவராய்

பாரமான தட்டைப் பக்குவமாய் சுமந்தபடி - அங்கு
ஓரமாய் உள்ள கிணற்றடியில் கால்கழுவி - பின்

கோவிலுக்குள் போவதற்கு ஆயத்தமானபோதே - தெரிந்தது
தேவையில்லாது தூக்க வைத்தார் தட்டை என்று

தட்டுக்களை வைப்பதற்கு தரையிலே இடமில்லை - உள்ளே
எட்டிக்கால் வைக்கமுடியாத சனக்கூட்டம்

மாப்பிள்ளையும் தோழனுமாய் திரிபவரில்
எப்பிள்ளை யாரென்று தெரியவில்லை சிலருக்கு

'பிழையான பிள்ளையைப் பின்தொடர்ந்து சென்றதனால் - தாம்
தவறவிட்டோம் தமையழைத்தோர் தாலிகட்டைப் பார்ப்பதற்கு' என்று சிலர்

தாலிகட்டும் இடத்தினை தமதாக்கிக் கொண்டு - தமக்குரியோர்
வேளைவரக் காத்திருப்போர் நிறைந்ததனால் - உள்ளே

போய்ப்பார்க்க முடியவில்லை என்பதாயும் சிலர்
ஆர் பார்க்காது விட்டாலென்ன - தம்

தாய் தந்தையொடு முருகப்பெருமானின்
பேர் ஆசியைப் பெற்றுக் கொண்ட மகிழ்வோடு தாலியேற்று வந்தவர்கள்

அடுத்த மண்டபத்தில் ஆறுதலாய் ஏற்கின்றார் - அதுவரையில்
பொறுத்திருந்தோர் அர்ச்சனையையும் ஆசியையும்

அதுமுடிய நடக்கவேணும் ஆலயத்தின்
அருகிருக்கும் மடங்களில் ஒன்றிற்கு

அவரவரால் ஒழுங்கு செய்யப்பட்ட விருந்து அது - அங்குமட்டும்
தவறுதலாக ஆரேனும் போனதாகத் தெரியவில்லை

அருகினிலே கருணாகரத் தொண்டமானின் ஆறு இருந்தபோதும்
கொழுத்தும் வெய்யிலையும் வேர்த்துக் கொட்டும் வெக்கையையும்

குடலை இழுத்துக் கொள்ளும் பசியையும்
தடுத்துக்கொள்ள முடியவில்லை

மருதமரக் காடாக அன்றிருந்த நிழல்மரங்கள் - இன்றும்
ஓரிரண்டாய் ஆங்காங்கே நிழல் கொடுக்க - அதில்

அமருதற்கு முடியாது ஓடுகின்றார் ஒவ்வொருவரும்...

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

கனடிய செய்திகள்
Canadian News

# "கனடியத் தமிழர் பேரவை தமிழ்ச் சமூகத்திடமும் புலம்பெயர் தமிழர்களிடமும் உறுதியானதும், தெளிவானதுமான மன்னிப்பைக் கோர வேண்டும்."

## ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி கோரிக்கை

"இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்தது மற்றுமின்றி, கொடூரமாக சித்திரவதைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், நிரந்தர மௌனமாக்கல் போன்றவற்றின் தடயங்களை விட்டுச்சென்றவர். காணாமல் போனவர்களுக்கான இடைவிடாத தேடுதல், அடிக்கடி பாரிய புதைகுழிகள் வெளிப்படுத்துவது என தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலையை அப்பட்டமாக நினைவூட்டுகிறது. ராஜபக்சேக்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கைக-ளில் உள்ள இரத்தக்கறைகள் அழிக்க முடியாதவை, மேலும் இந்த போர்க்குற்றவாளிகளுடன் நாம் மேற்கொள்கின்ற எந்தவொரு தொடர்பும் பாதிக்கப்பட்ட எமது மக்களால் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இவ்வாறான கொடூரமான குற்றங்களில் ஈடுபட்டுள்ள நபர்களுடனான சமீபத்திய சந்திப்பு தமிழ் சமூகத்தை ஏமாற்றும் மற்றும் ஆழமாக காயப்படுத்திய ஒரு வேதனையான விடயமாகும். எனவே. கனடியத் தமிழர் பேரவை (CTC), குளோபல் தமிழ் மன்றம் (GTF) மற்றும் இந்தப் பிரதிநிதிகள் குழுவில் பங்குபெற்ற அனைவரும் தமிழ்ச் சமூகத்திடமும் புலம்பெயர் தமிழர்களிடமும் உறுதியான, தெளிவான மன்னிப்பைக் கோர வேண்டும். இந்த குழுவினர் நடத்திய இந்த சந்திப்பானது இலங்கையில் அதிகாரத்தில் இருந்துகொண்டு போர்க்குற்றங்களுக்கு துணைபோனவர்களிடமும் இன்னும் தமிழர்களுக்கு எதிரான கண்டிக்கத்தக்க நடவடிக்கைகளுக்கு பதிலளிக்காதவர்களிடமிருந்து பொறுப்புக்கூறலைக் கோருகிறது. இது போர்க்குற்றங்களுக்கு எதிரான நீதிக்கான உலகெங்கும் வாழும் தமிழர்களின் போராட்டத்திற்கான துரோகம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்."



இவ்வாறு கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் – கனடா அமைப்பின் "வர்த்தக தீபம் 2023" நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது

**விமர்சகர் இலங்கேஸ் பார்வையில்**

இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா அமைப்பின் "வர்த்தக தீபம் 2023" நிகழ்வு மற்றும் இவ்வருடத்திற்கான "இலங்கை கனடா வர்த்தக வெற்றியாளர் விருதுகள் வழங்கும் விழா" கடந்த செவ்வாய்க்கிழமை 2023-12-26 அன்று மிகவும் சிறப்பாக Scarborough Convention Center மண்டபத்தில் நடைபெற்றது.























மண்டபம் நிறைந்த விழாவாக அமைந்த இந்த வர்த்தகதீபம் விருது வழங்கும் விழாவிற்கு கனடிய தமிழர் சமூகத்தில் பல்வேறு துறைகளில் பிரகாசிக்கும்முக்கியமான தமிழ் சமூகப் சமய பெரியார்கள் அந்த பிரமாண்டமான மண்டபத்தை அலங்கரித்து அழகு செய்தார்கள். கனேடிய சமுதாயத்தின் மிகப் பெரிய உச்சத்தைத் தொட்ட தொழில் முனைவோர்களை அடையாளம் கண்டு அவர்களை மென் மேலும் வளர்ச்சிப்பாதையில் முன்னோக்கி செல்லும் நோக்குடன் பதினோராவது ஆண்டு விருதுகள் வழங்கும் விழா சிறப்பான இராப்போசனத்துடன் பல்சுவை கலாச்சார நிகழ்ச்சிகளுடன் இனிதே நடந்தேறியது பாராட்டுதல்களுக்குரியதாகும். இந்த விழாவில் அனைத்துத் துறை சார்ந்த வர்த்தகர்களுக்கும், வளர்ந்து வரும் தொழில் முனைவோர்களுக்கும் விருதுகள் வழங்கி கௌரவம் செய்யப்பட்டதுடன் சமூகம் மற்றும் ஊடகத்துறை சார்ந்த விருதுகள் என ஒன்பது சிறப்பான விருதுகள் வழங்கியமை மண்டபத்தில் இருந்த அனைவரையும் அவர்களின் வளர்ச்சி கண்டு ஒரு கணம் மெய்சிலிர்க்க வைத்தது என்றால் அது மிகையாகாது.

கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்க தற்போதைய தலைவர் திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர்களின் தலைமை உரையில் சங்கத்தின் ஆரம்பமும் தாயக மக்களுக்கு ஆற்றிவரும் பணிகளையும் குறிப்பிட்டதோடு விழாவின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்து செயல்பட்ட முன்னாள் தலைவர்கள் திருஸ்ணகோபால், திரு. கேதா நடா மற்றும் அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் நிறைந்த பாராட்டுக்களையும் ஆதரவு வழங்கிய. வர்த்தக பெருமக்களுக்கும் இதயம் நிறைந்த நன்றிகளையும் தெரிவித்து கொ. விக்னேஸ்வரன் மற்றும் ஒலிபரப்பாளர் நடா ராஜ்குமார ஆகியோர் மேடையில் சிறப்பான முறையில் கௌரவிக்கப்பட்டனர்.

சங்கத்தின் பொருளாளர் திரு. க.கருணானந்தன் அவர்களின் வரவேற்புரையும் இடம்பெற்றன. இவ்வருடத்திற்குரிய விருதுகளைப் பெற்றவர்கள் மேடைக்கு அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களை கௌரவம் செய்தவர்கள் கூட எமது தமிழர் சமூகத்தின் முக்கிய "தூண்களாக" கருதப்படுகின்றவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம்-கனடா அமைப்பின் முன்னாள் தலைவர்கள் மேடைக்கு அழைக்கப்பெற்று சபையோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர்.

இளைப்பாறிய முன்னாள் கனேடிய அரசாங்கத்தில் வருமான வரித்துணைக்களத்தில் உயர் பதவியை வகித்தவரும் தாயக மண்ணில் பிரபல்யமான பொருளியல் ஆசிரியராகவும் மற்றும் உதவி அரசாங்க அதிபராகவும் பதவி வகித்த உயர் திரு. செந்தில் ஆறுமுகம் அவர்கள் இம்முறை விழாவின் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தமை விழாவின் வெற்றியினை பன்மடங்கு மெருகூட்டியது. செந்தில் அவர்களின் ஐந்து நிமிட பேச்சு எல்லோரையும் மௌனத்தில் ஆழ்த்தி ஆழமாக கிரகிக்க வைத்தது.

பரதநாட்டியக் கலையை அனைவருக்குமான கலையாக மாற்ற வேண்டும் என்ற இலக்குடன் செயல்பட்டு பலரின் பாராட்டுகளை பெற்று மென் மேலும் பரதக்கலையினை கனடாவில் வளர்க்கும் நோக்குடன் தங்களது பிள்ளைகளையும் முழுமையாக உள்வாங்கி பரதக்கலையின் அரசி என எல்லோராலும் அழைக்கப்படும் சிதம்பர நடன பள்ளி அதிபர் கௌரி பாபு அவர்களின் இருபதுக்கும் மேலான மாணவிகள் பங்கெடுத்த நடனங்கள் மண்டபம் நிறைந்த அனைவரையும் மனம் குளிர வைத்தது. வயோதிபர்களுக்கு இன்ப அதிர்ச்சியை இதயங்களில் உருவெடுக்க வைத்தது. நிழ்வில் பங்கெடுத்த மாணவர்கள் மாணவிகள் அனைவருக்கும் சிறப்பான விருதுகளுடன் வீடு விற்பனை முகவர் சசி சன்முகநாதன் அவர்களின் அன்பளிப்பு பொதிகளும் வழங்கியமை பாராட்டுதல்களுக்குரியதாகும்.

விழாவின் சிறப்பம்சமாக மெகா வரநெசள இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக இருந்ததோடு தாயகத்தில் இருந்து வந்த பிரபல தாயகப்பாடகர் சாந்தனின் புதல்வரும் மற்றும் வருமானவரி தனம் கனகரெட்ணம் அவர்களின் பாடல்களும் சபையோரின் நிறைந்த பாராட்டுக்களை பெற்றன மட்டுமின்றி நேயர்களின் பல விருப்பமான பாடல்களையும் எந்தவித ஒத்திகையும் இன்றி அரவிந்தனின் இசையில் வழங்கியமை எல்லோரையும் ஆச்சரியத்தில் உண்டு பண்ணியது. விஷேடமாக அமைப்பின் தலைவர் சோம சச்சிதானந்தன் அவர்கள் மிகவும் உச்சஸ்தாணியில் அமைந்த "மருதமலை மாமணியே" என்ற பாடல் அனைவரையும் கைத்தாளம் அசைத்து முணுமுணுக்கவும் வைத்தது.

வழமைபோல ஏலம் கூறும் நிகழ்வும் மனதை கவரும் வகையாக அமைந்தது. ஏலம் கூறும் நிகழ்வினை இலங்கேஸ் அவர்கள் தலைமை தாங்கி நிகழ்விற்கு பெருமை சேர்த்தார். ஏலத்தில் பெறுமதி வாய்ந்த தங்க நகையினை ஓம்மீரா நகைமாளிகை உரிமையாளர்கள் வழங்கியிருந்ததோடு தம்பதிகளாக வருகை தந்து விழாவை சிறப்பித்தனர். ஏலத்தில் இரண்டாயிரம் டாலர்கள் அதிகூடிய ஏலத்தின் கூறல் விலையினை வியாபார அதிபர்கள் அபி மற்றும் அமலன் ஆகியோர் தம்பதிகளாக ஏற்றுக்கொண்டது அவர்களின் பங்களிப்பினை இமய மலைக்கு உயர்த்தி சென்றது. இவ் ஏலத்தில் பெற்றுக்கொண்ட தொகையானது தாயகத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழாக வாழும் அல்லலுறும் மக்களுக்கு சென்றடைவது அமைப்பின் தாயக நோக்கிலான மனிதாபிமான உதவித்திட்டங்களின் ஓர் அலகு என்பதனை உறுதி செய்தது.

விருது வழங்கும் நிகழ்வினை சிறப்பிக்க கனடாவின் முதன்மை பத்திரிகையான உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். விழாவின் இறுதியில் உதவும் பொற் கரங்களின் (Helping Golden Hands) ஸ்தாபகரும் தலைவருமான திரு. விசு கணபதிப்பிள்ளை அவர்களுக்கு அவர்கள் ஆற்றிவரும் சமூகப்பணி மற்றும் அமைப்புக்கு வழங்கிவரும் பங்களிப்புக்கு மதிப்பளித்து சிறப்பான கௌரவ விருது வழங்கி கௌரவித்தது அமைப்பானது எவ்வித பாகுபாடுமின்றி கிழக்கிலங்கையையும் ஒன்றிணைத்து செயல்படுவதை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியதோடு சென்ற ஆண்டில் மட்டக்களப்பு மாநகரை சேர்த்த வர்த்தகரை சங்கம் விருது வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

விழாவின் மற்றுமொரு சிறப்பம்சமாக வர்த்தக தீபம் என்ற சஞ்சிகை மிகவும் சிறப்பாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது. சஞ்சிகையினை மிகவும் சிறப்பான ஓர் மலராக வெளியிட்ட "Designs 2 Prints Ltd." அதிபர் பிரபாகர் அவர்களுக்கும் மலரின் முகப்பினை சிறப்பாக வடிவமைத்த கென் கிருபா அவர்களுக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக. சஞ்சிகையின் வடிவமைப்புக்கு ஓர் பிள்ளையார் சுழி. 2023 வர்த்தகதீபம் நிகழ்வும் அருமையான விருந்தும் பார்வையாளர்கள் அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்திவிட்டதென்றே கூறலாம். இதற்காக உழைத்த சங்க தலைவர், அனைத்து நிர்வாகத்தினருக்கும் மற்றும் தொண்டர்களுக்கும் நிறைந்த பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

# விஜயகாந்துக்கு அஞ்சலி செலுத்த குவிந்த மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் திணறிய போலீஸார்

இந்திய செய்திகள்





தேமுதிக தலைவர் விஜயகாந்தின் மறைவையடுத்து, அவரது உடல் வைக்கப்பட்டிருந்த இடத்தில் போதிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என அஞ் சலி செலுத்த வந்த தொண்டர்கள் வேதனை தெரிவித்தனர். தேமுதிக தலைவர் விஜயகாந்த் நேற்று காலை காலமானதை அடுத்து, அவரது உடல் கோயம் பேட்டில் உள்ள கட்சித் தலைமையகத்துக்கு கொண்டு வரப்படுவதாக தகவல் வெளியானது. இதையடுத்து காலை முதலே தொண்டர்கள் குவியத் தொடங்கினர். நேரம் போக போக தொண்டர்களின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணம் இருந்தது. அப்போது முன்வாசலில் குவிந்திருந்த தொண்டர்களுக்கு போலீஸார் ஒலிப்பெருக்கி மூலம் தக்க அறிவுறுத்தல்களை வழங்கி கட்டுக்குள் வைத்திருந்தனர்.

தலைமையகத்தின் வாயிலில் இருந்து தொண்டர்கள் அஞ்சலி செலுத்திவிட்டு செல்லும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிற்பகல் 1.30 மணியளவில் விஜயகாந்தின் உடல் தலைமையகத்துக்கு முக்கியப் பிரமுகர்கள் வரும் வழியில் கொண்டு வரப்பட்டது. அதுவரை கட்டுக்குள் இருந்த தொண்டர்கள், முண்டியடித்துக் கொண்டு உள்ளே நுழைய முயன்றனர். அவர்களைக் கட்டுப்படுத்துவது போலீஸாருக்கு மிகுந்த சவாலாகவே இருந்தது. தொடர்ச்சியாக பலமுறை தள்ளு முள்ளு ஏற்பட்டது. முக்கிய பிரமுகர்கள் வருகை தரும் வழியிலும் தொண்டர்கள் நுழைய முயன்றபோதும் போலீஸார் கட்டுப்படுத்தினர். தொண்டர்கள் முண்டியடிப்பதும், போலீஸார் கட்டுப்படுத்துவதும் என இரவு வரை இதே நிலை நீடித்தது. மிகப்பெரிய தலைவருக்கு குறுகிய இடத்தில் அஞ்சலி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது வேதனையளிப்பதாக தொண்டர்கள் தெரிவித்தனர். மேலும், ஆண்களுக்கு இணையான அளவில் அஞ்சலி செலுத்த குவிந்த பெண்களும் கூட்ட நெரிசலில் சிக்கித் தவித்தனர்.அதே நேரம், இறுதியாக தங்களது கேப்டனை அருகில் பார்க்க முடியவில்லை எனவும் தொண்டர்கள் வருத்தம் தெரிவித்தனர்.

மக்கள் சிரமப்பட்டு அஞ்சலி இது தொடர்பாக அஞ்சலி செலுத்திய பிறகு தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கூறும்போது, "பல்லாயிரக்கணக்கான ரசிகர்களும் தொண்டர்களும் விஜயகாந்த் உடல் வைக்கப்பட்டிருக்கும் தேமுதிக அலுவலகத்துக்கு வெளியே நிற்கிறார்கள்.விஜயகாந்த் உடலுக்கு அஞ் சலி செலுத்துவதற்கு சிரமப்பட்டு வந்து அஞ் சலி செலுத்தி செல்கின்றனர். தமிழகம் முழுவதும் இருந்து தேமுதிக தொண்டர்களும், ரசிகர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இரு கைக்கூப்பி தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறோம். தமிழகம் முழுவதும் இருந்து வரும் தொண்டர்கள், ரசிகர்கள் அஞ்சலி செலுத்துவதற்கு ஏதுவாக ராஜாஜி அரங்கத்தில் விஜயகாந்த் உடலை வைக்க தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். நாளை (இன்று) பாஜக மூத்த தலைவர்களும் வர இருக்கிறார்கள்.எனவே, பெரிய அளவு கூட்டம் கூடும் என்பதால், முதல்வர் ஸ்டாலின் எங்களின் கோரிக்கையை பரிசீலனை செய்து, பொதுமக்கள் அஞ்சலிக்காக ராஜாஜி அரங்கத்தில் விஜயகாந்த் உடலை வைக்க வேண்டும்" என்றார்.

விஜயகாந்த் உடலுக்கு மக்கள் இறுதி அஞ்சலி செலுத்த போதிய முன்னேற்பாடுகள் செய்யப்படாததால் நெரிசலில் மக்கள் சிக்கி அவதிக்குள்ளாயினர். இதன் காரணமாக தற்போது விஜயகாந்தின் உடல் தீவுத்திடல் மைதானத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. விஜயகாந்த் முகத்தை கடைசியாக பார்க்க வேண்டும் என்ற ஏக்கத்தில்

### தேமுதிக தலைமை அலுவலகத்தில் சுவர் ஏறி சென்ற தொண்டர்கள்.

தேமுதிக கட்சித் தலைமை அலுவலகத்தையொட்டி உள்ள 2 மேம்பாலங்களின் மீது ஏறி நின்று பொது மக்கள் மற்றும் தொண்டர்கள் விஜயகாந்த் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். தேமுதிக அலுவலகத்துக்குள் நுழைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால், உள்ளே நுழைந்து அஞ்சலி செலுத்த வேண்டும் என்ற ஆர்வத்தில் சில தொண்டர்கள் சுவர் ஏறிக் குதித்து கட்சி அலுவலகத்துக்குள் நுழைய முயன்றனர். அவர்களை போலீஸார் தடுத்து நிறுத்தினர்.'என்னயா காசு.. காசு...' டிரெண்டாகும் பேச்சு: விஜயகாந்தின் வாரிக் கொடுக்கும் குணம் குறித்து பேசும்போது அவரது பொதுக்கூட்டத்தின் உரை தவிர்க்க முடியாதது. அந்த பொதுக்கூட்டத்தில், "என்னயா காசு.. காசு.. காசு.. பணம்... அட போங்கயா நீங்களும் உங்க காசும். கோடி கோடியா சேர்த்து வச்சு எங்கயா கொண்டு போக போறீங்க... மக்கள் கொடுத்தது எடுத்தா எடுத்துட்டு போகட்டும். எனக்குனு ஒரு இடம் இருக்குமில்ல... நாங்க 4 பேர் வந்தா ஒரு வேளை சோறு போட மாட்டீங்களா? என கூறியிருப்பார்.

அந்த காணொலி நேற்று அதிகளவு பகிரப்பட்டது.நிறைவேறாத ஆசை: பூந்தமல்லி யை அடுத்த காட்டுப்பாக்கம் அட்கோ நகர் பகுதியில் 20 ஆயிரம் சதுர அடியில் கடந்த 2013 ம் ஆண்டு முதல் புதிதாக ஒரு வீட்டை விஜயகாந்த் கட்டி வந்துள்ளார். மிகப் பிரம்மாண்டமாக கட்டப்பட்டு வந்த இந்த வீட்டின் கட்டுமானப் பணிகள் கடந்த சில ஆண்டுகளாகத் தொய்வடைந்த நிலையில், அண்மையில் மீண்டும் பணிகள் வேகமெடுத்தன. தற்போது 90 சதவீத பணிகள் முடிவடைந்த நிலையில், கடந்த 2 வாரங்களுக்கு முன்னரே பால் காய்ச்சப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிகழ்ச்சியில் விஜயகாந்தால் பங்கேற்க முடியவில்லை எனத் தெரிகிறது. அந்த வீட்டில் வசிக்க வேண்டும் என்ற ஆசை நிறைவேறாமல் போனது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அஞ்சலி செலுத்திய தலைவர்கள்: தேமுதிக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த

விஜயகாந்த் உடலுக்கு தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருநாவுக்கரசர் எம்.பி. திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, பாமக தலைவர் அன்புமணி, விசிக தலைவர் திருமாவளவன்;இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொய்தீன், விஜடி துணைத் தலைவர் ஜி.வி.செல்வம், வி.கே. சசிகலா, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா, நடிகர்கள் சத்யராஜ், நாசர், பாண்டியராஜன் பிரபு, விக்ரம் பிரபு, கவுண்டமணி, அர்ஜூன், விஜய்சேதுபதி, மாதவன், நிழல்கள் ரவி, ஆரி, கருணாஸ், சூரி, ஷாம், ஆனந்த்ராஜ், விமல், அதர்வா, தியாகு, சதீஷ், ரோபோ சங்கர், விஜயகுமார்;நடிகைகள் கவுதமி, சங்கீதா, கோவை சரளா, ஆர்த்தி, இயக்குநர்கள் கே.எஸ்.ரவிக்குமார், ஏ.ஆர்.முருகதாஸ், விக்ரமன், பி.வாசு, அமீர், லிங்குசாமி, கவுதமன், பேரரசு, மாரி செல்வராஜ், தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பி.ஆர். பாண்டியன், தயாரிப்பாளர் கலைப்புலி எஸ்.தாணு உள்ளிட்ட அரசியல், சினிமா பிரபலங்கள் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

# விஜயகாந்தின் அரசியலை முற்றிலும் முடக்கிய சிறுநீரக பிரச்சினை : அமெரிக்காவில் சிகிச்சை பெற்றும் பலனில்லை



விஜயகாந்துக்கு ஏற்பட்ட சிறுநீரகப் பிரச்சினை, அவரது அரசியலை முற்றிலும் முடக்கியது.முன்னாள் முதல்வர்கள் கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோர் அரசியலில் உச்சத்தில் இருந்தபோது தேமுதிகவைத் தொடங்கிய விஜயகாந்த், 2006 சட்டப்பேரவைத் தேர்தலில் வென்று, முதல்முறையாக எம்எல்ஏவானார். 2011 தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி அமைத்து, எதிர்க்கட்சித் தலைவராக உயர்ந்தார்.அரசியலில் வளர்ந்து வந்த விஜயகாந்த், தமிழகத்தின் அடுத்த முதல்வராக வரவும் வாய்ப்புள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்து வந்தனர்.

ஆனால், அவருக்கு ஏற்பட்ட உடல்நலப் பிரச்சினையால் எல்லாம் தலைகீழாக மாறியது.2014ல் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விஜயகாந்துக்கு சிறுநீரகப் பிரச்சினை இருப்பது தெரியவந்தது. சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை நிரந்தரத் தீர்வாக இருந்த நிலையில், டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொண்டு வந்தார். உடல்நலக் குறைவால், அவரது அரசியல் செயல்பாடுகள் படிப்படியாக குறையத் தொடங்கின.சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக அமெரிக்கா, சிங்கப்பூருக்கு சென்றார்.


2019ல் விஜயகாந்துக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் கட்சி மற்றும் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல், வீட்டிலேயே ஓய்வெடுக்கத் தொடங்கினார்.2020 அக்டோபர் மாதம் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட விஜயகாந்த், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்தார். சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதால், அவ்வப்போது பரிசோதனைகளுக்காக மருத்துவமனைக்குச் சென்று வந்தார்.இதற்கிடையில் அவருக்கு தைராய்டு, நீரிழிவு நோய் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளும் ஏற்படத் தொடங்கின. இதனால் சரியாக நடக்க முடியாமலும், பேச முடியாமலும் அவதிப்பட்டு வந்தார்.

2022 ஜூலை மாதம் அவருக்கு இருந்த நீரிழிவுப் பிரச்சினையால், வலது காலில் உள்ள விரல் பகுதியில் ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு, அந்த விரல் அகற்றப்பட்டது. பின்னர் விஜயகாந்தின் செயல்பாடுகள் முற்றிலும் முடங்கத் தொடங்கின. அதேநேரத்தில், தேமுதிகவும் பின்னடைவை சந்திக்கத் தொடங்கியது.மாதம் ஓரிரு முறை மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக விஜயகாந்தை குடும்பத்தினர் அழைத்துச் சென்றனர். பிறந்தநாள் உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளின்போது சக்கர நாற்காலியில் அமர்ந்தபடியே தொண்டர்களை விஜயகாந்த் சந்தித்துவந்தார்.

விஜயகாந்த், தனது குடும்பத்தினருடன் இருக்கும் படங்கள் அவ்வப்போது சமூக வலைதளத்தில் பதிவிடப்பட்டு வந்தன.வீட்டில் ஓய்வில் இருந்த விஜயகாந்துக்கு இருமல், காய்ச்சல், சளி தொந்தரவுகள் ஏற்பட்டதால் கடந்த நவ. 18ம்தேதி சென்னை அடுத்த மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர் 23 நாட்கள் சிகிச்சைக்குப் பின்னர் குணமடைந்த நிலையில், கடந்த 11ம் தேதி வீடு திரும்பினார். கடந்த 26ம் தேதி இரவு விஜயகாந்துக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால், அவர் உடனடியாக மியாட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வென்டிலேட்டர் உதவியுடன் மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வந்த நிலையில் நேற்று காலை 6.10 மணி அளவில் விஜயகாந்த் உயிரிழந்தார்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1080

## ஆரையம்பதி பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

*“ கணநாதர் போற்றும் கடவுளே வருக*
*ஓம்ஆம் எனுமுயர் பராபரனே*
*ஆம்ஓம் எனும் ஆதியே வருக*
*ஐந்து கடவுளா ஐந்தொழில் நடாத்தும்*
*எந்தையே தந்தியிலிவர்ந்து நீ வருக*
*வஞ்சனை சூனியம் மாறிடவருக*
*பவமறுத் தருட்கண் பார்த்திட வருக வருகவே ”*

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களுள் விநாயகர்சஷ்டி விரதம் முக்கியமானது. இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்ற இருபத்தியொரு நாட்களும், விநாயகப்பெருமானுக்குப் பொங்கல் வைத்து, அலங்காரபூசைகள் நிகழ்த்துவர். விநாயகர் விரதத்தின் இறுதிநாளாகிய பெருங்கதை தினத்தில், விசேடமான பெரும்பொங்கல் நடைபெறும். அத்தோடு பல்வேறுவிதமான நிவேதனப் பொருட்களையும் விநாயகருக்கு நிவேதித்து அலங்காரபூசை நடைபெறும்.

இவற்றோடு தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரைக்கஞ்சி, சித்திரபுத்திரநாயனார் பூசை, நாகதம்பிரான் பொங்கல், ஆவணி விநாயகசதுர்த்தி, கார்த்திகைவிளக்கீடு, முதலிய காலங்களிலும் சிறப்பான பூசைகள் நிகழ்வதோடு, விசேட அபிஷேகங்களும், திருவிழாவும் நடைபெறும். ஆனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துநாள் அலங்கார உற்சவங்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும். ஆனிப்பரணியிலே கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் வருடாந்த மகோற்சவம், உத்தரத்தன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். மதியநேரத்திலும், மாலையிலும் திருவிழாக்கள் நடைபெறும். இவற்றில் ஆரம்பத்தில் நடைபெறும் சில திருவிழாக்கள், ஆலயபரிபாலன சபையால் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கோயில் திருவிழாக்கள் என அழைப்பர். இந்நாட்களிலே சுவாமி எழுந்தருளி உள்வீதி வலம்வருவர். ஐந்தாம்நாள் நடைபெறும் திருவிழாவைக் குருக்கள் திருவிழா என அழைப்பர். இந்நாளிலிருந்து சுவாமி எழுந்தருளி உள்வீதியும், வெளிவீதியும் வலம்வருவது வழக்கமாகக் காணப்படுகின்றது.

ஆரையம்பதி பரமநாயினார் ஆலயத்தில் விசேடநாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் எழுந்தருள வாகனங்கள் பல காணப்படுகின்றன. குதிரை வாகனம், இடப வாகனம், யானை வாகனம், மயில் வாகனம், என்பன குறிப்பிடத்தக்கவையாகும். திருவிழாக்காலங்களிலே வெளிவீதி வலம்வரும்பொழுது விநாயகப்பெருமான் குதிரை வாகனத்திலும், சந்திரசேகரர் இடப வாகனத்திலும், பரமநயினார், பூரணை, புட்கலை சமேதராக யானை வாகனத்திலும், வள்ளி தெய்வயானை சமேதராக முருகப்பெருமான் மயில்வாகனத்திலும் எழுந்தருளி வலம்வருவர். இவ்வாகனங்கள் மலர்த்தோரணங்களாலும், மின்விளக்குகளாலும் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டுக் காணப்படும். அயற்கிராமங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான மக்கள், இத்திருவிழாநாட்களில் இவ்வாலயத்திற்கு வந்து சாம்பவதீட்சை பெற்றுச்செல்வர்.

இவ்வாலயத்தின் திருவிழாக்காலம், மக்களுக்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் கொடுக்கின்ற காலமாக அமையும். தீர்த்தோற்சவதினத்தன்று அதிகாலையிலேயே திருப்பொற்சுண்ணம் இடித்துக்கொண்டு, பல நூற்றுக் கணக்கான அடியார்கள் சூழ்ந்துவரக் கோயிலிலிருந்து புறப்பட்டு, சுவாமி கிழக்கு நோக்கி எழுந்தருளிச் செல்வார். கடற்கரையை அடைந்ததும் அங்கு அஸ்திரதேவருக்கு அபிஷேகம் நடைபெறும். அபிஷேகம் முடிந்தபின், சுவாமியை ஆலயத்திற்கு அழைத்து வருவர். வழிநெடுகிலும் தோரணங்கள் தூக்கி, மகரகும்பம் வைத்து சுவாமியை வரவேற்று மக்கள் சிறப்புச் செய்வர். சுவாமி கோயிலை வந்தடைந்ததும் யாகசாலை பிரிக்குங் கிரியைகள் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அன்றிரவு திருப்பொன்னூஞ்சல் நடைபெற்று, கொடியிறக்கம் நிகழும். பிராயச்சித்த அபிஷேகம், வைரவர்பூசை என்பவற்றுடன் அடுத்தநாள் வருடாந்த மகோற்சவம் நிறைவுபெறும்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பலவகைத் தத்துவநுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டவையாக விளங்குகின்றன. அத்தோடு மக்கள் உடலும் உள்ளமும் தூயவராகி மகிழ்வுடன் வாழவும் விழாக்களும் விரதங்களும் உதவுகின்றன. ஐயனாரின் தோற்றம் பற்றிப் புராணக் கதைகள் பலவாகக் காணப்பட்டபோதிலும், சிவவைணவ ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக, ஐயனார் வரலாறு விளங்குகின்றது. அரிகரனார் ஐக்கியம், சாதாரண நிலையில் புரிந்து கொள்ள முடியாத ஒரு நிலையாகக் காணப்பட்டபோதிலும், அருவ உருவமாய் காலத்திற்கும், குணத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளின் நியதியின்படி, காரிய காரணங்களுக்காக, அரிகரனார் ஐக்கியத்தின்மூலம் பிறந்த குழந்தையே, ஐயனார் என்பது ஞானிகள் கூற்றாகக் காணப்படுகின்றது. சபரிமலைக்கோவிலில் முன்பிருந்த ஸ்ரீ தர்மசாஸ்தா, பரசுராமர் பிரதிஷ்டை செய்த தர்மசாஸ்தா, மணிகண்டன், ஐயப்பன் அனைத்தும் ஹரிஹரசுதனின் அவதாரமாக விளங்குகின்றன.

*“ சிந்து வாரணம் வாழி சேவல் வாழி*
*திறன் மகாகாளர் முதற் சேனை வாழி*
*சந்ரநுதற் பூரணைபுட்கலையும் வாழி*
*சதுர்வேத ஆச்சிரம தருமம் வாழி*
*மந்திர வேதியர் வாழி மகங்கள் வாழி*
*வான்மகளிர் கற்புநெறி மநுநூல் வாழி*
*எந்தையரி ஹரகுமர னடியார்கள் வாழி*
*ஆரையம்பதி ஐயனார் பதியென்றும் வாழி வாழி. ”*

**- வளரும்**

# அன்பின் தொனி - 718

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை - Grace of God**

### சமுதாய வாழ்வின் விதிகள்

நீ ஒரு அதிபதியோடே போஜனம்பண்ண உட்கார்ந்தால், உனக்கு முன்பாக இருக்கிறதை நன்றாய்க் கவனித்துப்பார். நீ போஜனப்பிரியனாயிருந்தால், உன் தொண்டையிலே கத்தியைவை. அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே; அவைகள் கள்ளப்போஜனமாமே. ஐசுவரியவானாகவேண்டுமென்று பிரயா சப்படாதே; சுயபுத்தியைச் சாராதே. இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப்போல சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம்.

### வன்கண்ணனுடைய ஆகாரத்தைப் புசியாதே

அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்; புசியும், பானம்பண்ணும் என்று அவன் உன்னோடே சொன்னாலும், அவன் இருதயம் உன்னோடே இராது. நீ புசித்த துணிக்கையை வாந்திபண்ணி, உன் இனிய சொற்களை இழந்துபோவாய். மூடனுடைய செவிகள் கேட்கப்பேசாதே; அவன் உன் வார்த்தைகளின் ஞானத்தை அசட்டைபண்ணுவான்.

### திக்கற்ற பிள்ளைகளுடைய நிலங்களை அபகரித்துக்கொள்ளாதே

பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே; திக்கற்ற பிள்ளைகளுடைய நிலங்களை அபகரித்துக்கொள்ளாதே. அவர்களுடைய மீட்பர் வல்லவர்; அவர் உன்னுடனே அவர்களுக்காக வழக்காடுவார். உன் இருதயத்தைப் புத்திமதிக்கும், உன் செவிகளை அறிவின் வார்த்தைகளுக்கும் சாய்ப்பாயாக. பிள்ளையை தண்டியாமல் விடாதே; அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே. என் மகனே, உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந் தால், என்னிலே என் இருதயம் மகிழும். உன் உதடுகள் செம்மையானவைகளைப் பேசினால், என் உள்ளிந் திரியங்கள் மகிழும்.

### நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு

உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமைகொள்ள விடாதே; நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது. என் மகனே, நீ செவிகொடுத்து ஞானமடைந்து, உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து. மதுபானப்பிரியரையும் மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்; தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும். உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணாதே. சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு. நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள்; உன்னைப் பெற்றவள் மகிழுவாள்.

### என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா

என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக. வேசி ஆழமான படுகுழி; பரஸ்திரீ இடுக்கமான கிணறு. அவள் கொள்ளைக்காரனைப்போல பதிவிருந்து, மனுஷருக்குள்ளே பாதகரைப் பெருகப்பண்ணுகிறாள். ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும், பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப்போலும் இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை என்னை அறைந்தார்கள், எனக்குச் சுரணையில்லை நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்.

**தொடரும்...**

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# இவ்வார ராசிபலன்

## 29-12-2023 வெள்ளி தொடக்கம் 04-01-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** திருப்திகள் பெருகும் வாரம். திறமைகள் வெளிப்படும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். ஆன்மீக பயணம் மேற்கொள்வீர்கள். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. முதலீடுகள் உண்டாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளியின் நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். மனோபயம் அகலும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். நட்டம் இல்லாத காலம். பட்டம் பதவி வந்து சேரும். வினைகள் அகலும். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். அன்னதானம் நிதானத்தை அதிகப்படுத்தும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. பழைய கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். திருப்புமுனை ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,4,5,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**ரிஷபம்:** ஆளுமையான செயல்பாடுகள் அரங்கேறும் வாரம். பிரார்த்தனைகள் நிறைவேறும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். வளமான காலம். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். புதிய சிந்தனை உருவாகும். சுபச்செய்திகள் வரும். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். கணவன், மனைவி அன்யோன்யம் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். சுபச்செய்திகள் வரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மையுண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலை விலகும். தகுதிகள் மிகுதியாகும். சாதனைகள் ஏற்படும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. திடீர் திருப்பம் ஏற்படும். கண்நோய் வந்து போகும். பிரபல்ய ஆசை ஏற்படும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,N




**மிதுனம்:** வெற்றிக் கிட்டும் வாரம். அணிகலன்கள் சேரும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும், பொறுப்புக்கள் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். குடும்ப மன நிறைவு உண்டாகும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் லாபம் தரும். பெருமிதமான காலம். பழைய கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். இனிப்பானச் செய்தி வரும். போட்டிகள் மறையும். காதல் கை கூடும். விவாக முயற்சி வெற்றித் தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம்.
வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,2,4,9
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,F




**கடகம்:** சிக்கனத்தை கடைப்பிடிக்கும் வாரம். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு கூடும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். இடமாற்றம் ஏற்படும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்கு சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். சோம்பல் அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். ஆலோசனை பலன் தரும். தொல்லைகள் ஒழியும். பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கட்டிடத்தொழில் லாபம் தரும். கல்வியில் ஆர்வம் கூடும். வருமானம் வரும். குதூகலம் சேரும். வழிபாடு மாற்றம் தரும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். குதூகலம் சேரும். வெளியூர் பயணம் உண்டு. நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் தீரும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். பழையக்கடன் வசூலாகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளைவழிச் செலவு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோதைரியம் அதிகரிக்கும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,Z


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** மேன்மைகளை சந்திக்கும் வாரம். மெத்தனப் போக்கு விலகும். பயணம் லாபம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கௌரவம் உயரும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். பணவரவு உண்டு. புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் பெருகும். குடும்ப அன்யோன்யம் கூடும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை அகலும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வாகன மாற்றம் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். வரவுகள் திருப்தி தரும். சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. தனவரவு உண்டு. தாராளமான வருமானம் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வழக்கு வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். தொழில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்ஷ்ட எண்: 2,6,9,4
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**கன்னி:** உழைப்பிற்கான பலன் கிடைக்கும் வாரம். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் லாபம் கூடும். துன்பங்கள் அகலும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். உன்னதமான காலம். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் மறையும். நாவடக்கம் தேவை. தாய் வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். வீண் வம்பு உருவாகும். விரயங்கள் அதிகமாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். அலைச்சல் அதிகரிக்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வினைத்தீர்க்கும் பிள்ளையார்
அதிர்ஷ்ட எண்: 7,9,5,4, அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்'ட எழுத்துக்கள்: B,X




**துலாம்:** வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும் வாரம். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு அதிகரிக்கும். மாலைநேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். வாழ்த்துக்கள் கிடைக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. எதிர்கால எண்ணம் நிறைவேறும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். யோகமான காலம். முத்தாய்ப்பான வாய்ப்புக்கள் பெருகும். பணப்பற்றாக்குறை நீங்கும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வாய்ப்புக்கள் அதிகரிக்கும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். வெகுமதிகள் பெருகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். வெற்றிகள் குவியும். சாதகமான வாய்ப்பு உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 9,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,A




**விருச்சிகம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் கூடும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு கூடும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும் புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். வாழ்த்துக்கள் கிட்டும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். பங்குத்தொழில் பணம் தரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வமையும். சிந்தனை மேலோங்கும். வினைகள் அகலும். ஆதாயம் பெருகும். வழக்குகளில் வெற்றி உண்டு. வாகன மாற்றம் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். காரியம் கைக்கூடும். குடும்ப மேன்மை உண்டாகும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ரபகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U

(தொடர்ச்சி 22 பக்கம்)

- கனகராசா சரவணன் -

# தமிழ் மக்கள் சிங்கள தரப்பிற்கு இனிமேலும் வாக்களித்து ஏமாறக்கூடாது — தேர்தலை பகிஸ்கரிப்பதுதான் ஒரே ஒரு தெரிவு — நா.உ — கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசியலை முடக்குவதற்கு விலைபோயுள்ள தமிழ் தரப்புக்கள் இன்று ஒரு தமிழ் வேட்பாளர் நிறுத்தவேண்டும் என கோருகின்றனர் எனவே தமிழ் மக்கள் சிங்கள தரப்பிற்கு இனிமேலும் வாக்களித்து ஏமாறக்கூடாது என்பதுடன் தமிழ் மக்கள் ஒற்றுமையாக உலகிற்கும் சிங்கள தேசத்துக்கும் காட்டவேண்டியதாயின் இந்த தேர்தலை பகிஸ்கரிப்பதுதான் ஒரே ஒரு தெரிவு என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் 27-12-2023 அன்று புதன்கிழமை இடம்பெற்று உடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற ஒரு சில தரப்பு பெயர்களை முன்மொழிந்துள்ளனர் இந்த பின்னணியில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெல்லக்கூடிய தரப்பு ஒரு சிங்கள தரப்பு இதில் மாற்றுகருத்து இல்லை.

அந்த சிங்கள தரப்பு யாராக இருந்தாலும் கடந்த காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, பொறுப்பு கூறல், பாதுகாப்பு சம்மந்தப்பட் விடையங்கள் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டங்கள் அரசியல்கைதிகள் நிலைமை காணிகளை பறிக்கின்ற நிலமை உட்பட தாயகத்தில் தொடர்ச்சியாக சிங்கள மயப்படுத்துகின்ற வேலைத் திட்டங்கள் அனைத்தும் சம்பந்தமாக அந்த சிங்கள தரப்பால் நிறுத்தப்படுகின்ற அனைத்து தரப்புக்களும் தமிழ் மக்கள் பக்கம் இருந்தது கிடையாது.

தீர்வு சம்பந்தப்பட்ட விடையத்தில் முழு பெயரும் ஒற்றையாட்சியை வலியுறுத்துகின்ற நிலைபபாட்டில் தொடர்ச்சியாக இருக்கினறனர். வெளிப்படையாக 13 வலியுறுத்துவதாகவும் அல்லது ஒற்றையாட்சிக்குள் மட்டும் தான் தீர்வு அல்லது இருக்கின்ற 13 திருத்தத்தில் சிலதை கழித்து செல்லுகின்ற விடையமாக இருக்கின்றது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள் இந்த தரப்பிற்கு போக முடியாது என்ற முடிவில் தமிழ் மக்கள் இருக்கின்றனரா? மிகத் தெளிவு சிங்கள தரப்பிற்கு இனிமேலும் நாங்கள் வாக்களித்து நாங்கள் ஏமாறக்கூடாது என்ற செய்தியை இந்த தேர்தலில் ஆவது தமிழ் மக்கள் உலகத்திற்கு காட்டவேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்தினால் முதல் வட்டத்தில் சிங்கள வேட்பாளர் வெல்லமுடியாத வாய்ப்பு இல்லாமல் போகும் இரண்டாது சுற்றில் தான் வேட்பாளர் தெரிவு செய்யலாம் அப்படிப்பட்ட சூழலில் அவர்கள் பேரம் பேச முன்வருவார்கள் அப்போது பேரம் பேசி ஒரு தரப்பை ஆதரிக்கின்ற நிலைப்பாட்டடை எடுக்கலாம்.

ஒரு வேட்பாளரை நிறுத்த வேண்டும் என தெரிவிக்கும் இந்த தமிழ் தரப்புக்கள் யார்? 35 வருடத்துக்கு மேலாக தோற்றுப்போன ஒற்றையாட்சிக்குள் இருக்க கூடிய 13 திருத்தத்தை வலியுறுத்துபவர்கள் வேறு எதைப்பற்றி கதைக்க தயாரில்லை இன்றைக்கு கூட பேரம் பேசக் கூடிய சூழல் இருக்கின்றனர்.

இலங்கை அரசு பணத்துக்கு புலம் பெயர் மக்களிடம் கெஞ்ச வேண்டியுள்ளது அப்படிப்பட்ட சூழலில் 13 திருத்தத்தை வலியுறுத்தி பேச்சுவார்தையில் ரணில் விக்கிரம சிங்கவுடன் நடாத்தினர். இந்த தரப்பா தமிழ் மக்களுக்கு இந்த வேட்பாளர்கள் உண்மையில் நேர்மையாக இந்த சந்தர்பத்தை பயன்படுத்தி இறுதி தீர்வு பற்றி பேசப்பேகின்றனரா?

கோருகின்ற தரப்பு பிழையான தரப்பு தமிழ் அரசியலை 13 முடக்குகின்ற திணிக்கின்ற ஒரு தமிழ் தரப்பு அதேவேளை பேரம் பேசி ஆதரிக்கப் போகினற தரப்பு முற்று முழுதாக தமிழர்களின் இனஅழிப்பை இன்றும் நியாயப்படுத்தி அதற்கு துணைபோகின்ற தரப்பாகத்தான் இருக்கின்றது.

தமிழ் தேசிய முன்னணி 2009ம் ஆண்டில் இருந்து பகிகரிப்பு என்ற விடையத்தை ஒவ்வொரு முறையும் அதன் ஊடாக உலகத்துக்கும் சிங்கள தேசத்துக்கும் சொல்லகூடிய ஒரு தெளிவான செய்தியை வலியுறுத்தியும் வந்தோம் துரஷ்டவசமாக நாங்கள் சொல்லும் அந்த கருத்தின் ஆழத்தை மக்கள் விளங்கி கொள்ளாமல் ஒவ்வொரு முறையும் போலியான கதைகளுக்கு விலை போய் இன்று ஏமாற்றப்பட்டு கடைசியில் மூக்கு உடைபட்டு முகம் குப்பற விழுந்ததுதான் மிச்சம்.

ஒவ்வொரு தரப்பும் எமது வயிற்றில் அடித்தனர் இனியாவது எல்லா தரப்பினரும் ஏமாற்றப்பட்டு இந்த முறையும் யாரையும் நம்பி வாக்களிக்கப் போவேமாக இருந்தால் ஏமாற்றப்படுவது இரண்டாது வட்டமாக இருக்கப் போகின்றது இது தான் எங்கள் முடிவா?

நிறுத்தும் வேட்பாளர் யார். அப்படிப்பட்ட வேட்பாளரை நிறுத்துவதாக இருந்தால் இன்று அரசியல் அரங்கில் தமிழ் மக்களால் ஏமாற்றப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகித்து ஏமாற்றிய தலைவர்களாகதான் இருக்கின்றனர்.

சி.வி. விக்கினேஸ்வரன் 3 மாதத்திற்கு முன்னர் ரணிலை ஆதரிக்கவேண்டும் என்ற அவர் தற்போது வேட்பாளராக வருவதற்காக ரணில் ஏமாற்றிவிட்டதாக தெரிக்கும் அவர் நாளைக்கும் நிலைப்பாட்டை மாற்ற தயங்கப் போவதில்லை 2016 ஒற்றையாட்சிக்குள் தமிழ் தேசிய அரசியலை முடக்கப்போவதாக தெரிவித்த விக்கினேஸ்வரன் தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கியவர்.

இப்படிப்பட்ட வேட்பாளர்கள் ஆகவே நிறுத்தப்படவுள்ள வேட்பாளர்கள் இன்றைக்கு தமிழ் மக்களால் நம்பக்கூடிய வேட்பாளராக இல்லை நிராகரிக்கப்படுகின்ற மக்கள் ஏற்றுக் கொள்ளாத வேட்பாளரை நிறுத்துவதன் ஊடாக அந்த தெளிவான செய்தியை குழப்புவதற்கு இந்த வேலைத்திட்டம் நடக்கின்றது.

மக்களுடைய தேவை உணர்ந்து அரசியல் கட்சிகள் ஒன்றிணையவேண்டும் என்ற தேவை கிடையாது தேவை எங்கு உள்ளது என்றால் தமிழ் மக்கள் தெளிவாக சரியான தரப்புக்கு பின்னால் ஒன்றிணைய வேண்டும் புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் 15 வருடங்கனுக்கு மேலாக யார் சரி யார் நேர்மை யார் இல்லை படிப்பதற்கு இந்த தரப்புக்கள் புதிதாக உருவாகும் தரப்புக்கள் இல்லை 15 வருடமாக இருந்த அதே தரப்புக்கள்தான்.

அன்று தொடக்கம் இன்று வரை யார் ஒரே நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கின்றனர் அல்லது ஒவ்வோரு தேர்தலில் புதுக்கதை தெரிவித்து ஏமாற்றி கடைசியில் ஏமாற்றிவிட்டார்கள் என மக்களிடம் சொல்லுகின்ற தலைவர்களை நம்ப போகின்றீர்களா என்பது கேள்வி? தமிழ் தேசிய மக்கள் முன்னணி உண்மையை சொல்லி உண்மையை விளங்கி கொண்டுள்ள கட்சி.

இந்த கேள்விக்கு மக்கள் தீர்க்கமான முடிவு எடுத்தே ஆகவேண்டும் ஒற்றையாட்சி இருக்க கூடிய 13 திருத்தத்தையும் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்கின்ற ஒரு தரப்பையும் ஒற்றையாட்சியை முற்று முழுதாக நிராகரிக்கின்ற தரப்பையும் ஒன்றிணையுமாறு கேட்கமுடியாது அது சாத்தியமே இல்லை மக்கள் முடிவு எடுக்கவேண்டும் தமிழ் தேசத்தின் இருப்பை ஒற்றையாட்சிக்குள் இருக்கின்ற அரசியல் அமைப்பை வைத்துக் கெண்டு தமிழ் மக்கள் ஒரு தீர்வை எட்டலாமா இல்லையா என முடிவு எடுக்கவேண்டும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அது நடக்கவே நடக்கது ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களின் பிரச்சனை தீர்க்கப்பட போவதில்லை நாங்களாகவே ஒற்றையாட்சிக்கு இனஙககின்றோம் என்றால் எங்களுடைய தேசத்துக்கு அழிவுகு இணங்குகின்றோம் என்பதாகும்.

## இவ்வார ராசிபலன்

(21 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** ஆடம்பர பொருள் சேரும் வாரம். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். காரியம் கைகூடும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். சாதகமான காலமாக அமையம். மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவு திருப்தி தரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். காரியம் கைகூடும். ஆனந்தம் குடிக்கொள்ளும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். விருப்பங்கள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. வணிகத்தொழில் விரிவடையும். பயணம் தடைப்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் பலன் தரும். பழையக்கடன் ஒழியும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 8,9,5,1*
*அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,N*




**மகரம்:** லாபம் அதிகரிக்கும் வாரம். சுபச்செய்தி வரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பிரச்சனைகள் தீரும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. கௌரவமான காலம். பறவைகளுக்கு உணவு தானம் அளித்தால் பணவரவு பெருகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். கால்நடைகளால் லாபம் உண்டு. கண்நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. முயற்சிகள் வெற்றி தரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். சாதனைகள் ஓங்கும். சிறப்புக்கள் வந்து சேரும். தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச்சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். உடல்நலம் கவனம் தேவை. எண்ணம் வண்ணமயமாகும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். கனிவான காலம். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி அதிகமாகும். மனைவியின் அன்யோன்யம் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். பெற்றோரின் ஆதரவு அதிகரிக்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 9,1,5,3*
*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,I*




**கும்பம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குடும்ப உறவு பலப்படும். உள்ளத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். சச்சரவுகள் அகலும். கடன் தொல்லை நீங்கும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். மன சந்தோஷம் கூடும். ஊக்கம் அதிகரிக்கும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பொன்னான காலமாக அமையும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கல்வி ஆர்வம் கூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 1,3,5,9*
*அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,A*




**மீனம்:** காரிய வெற்றி தரும் வாரம். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். இடமாற்றம் உண்டு. வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். மதிநுட்பம் தேவை. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். இடமாற்றம் ஏற்படும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் அக்கறை தேவை. வழக்குகள் சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். பாக்கிகள் வசூலாகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடு தவிர்க்கவும். சுபச்செலவு அதிகரிக்கும். திடீர் மாற்றம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 4,3,2,1*
*அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H*

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

## WE DEAL WITH ALL BANKS

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்தின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

Need Money? பணப்பிரச்சனையா?
கவலை வேண்டாம்! கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
•Loans
•Cash
•Debt Consolidation
•1st & 2nd Mortgage
•Home Renovation Loan
•Equity Loans
No Credit Check
Next Day Approval
Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்
Call Now:
647-812-6350

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1447 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 29, 2023

# இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் – கனடா அமைப்பின் “வர்த்தக தீபம் 2023” நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது

*– விமர்சகர் இலங்கேஸ் பார்வையில்...*



இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம்-கனடா அமைப்பின் “வர்த்தக தீபம் 2023” நிகழ்வு மற்றும் இவ்வருடத்திற்கான “இலங்கை கனடா வர்த்தக வெற்றியாளர் விருதுகள் வழங்கும் விழா” கடந்த செவ்வாய்க்கிழமை 2023-12-26 அன்று மிகவும் சிறப்பாக **Scarborough Convention Center** மண்டபத்தில் நடைபெற்றது.

மண்டபம் நிறைந்த விழாவாக அமைந்த இந்த வர்த்தகதீபம் விருது வழங்கும் விழாவிற்கு கனடிய தமிழர் சமூகத்தில் பல்வேறு துறைகளில் பிரகாசிக்கும்முக்கியமான தமிழ் சமூகப் சமய பெரியார்கள் அந்த பிரமாண்டமான மண்டபத்தை அலங்கரித்து அழகு செய்தார்கள். கனேடிய சமுதாயத்தின் மிகப் பெரிய உச்சத்தைத் தொட்ட தொழில் முனைவோர்களை அடையாளம் கண்டு அவர்களை மென் மேலும் வளர்ச்சிப்பாதையில் முன்னோக்கி செல்லும் நோக்குடன் பதினோராவது ஆண்டு விருதுகள் வழங்கும் விழா சிறப்பான இராப்போசனத்துடன் பல்சுவை கலாச்சார நிகழ்ச்சிகளுடன் இனிதே நடந்தேறியது.

(உள்ளே செய்தி 18ம் பக்கத்தில்)

# கடந்த 18 ஆண்டுகளாக சபரிமலை ஐயப்பன் ஆலய புனித பயணம் மேற்கொண்டு வரும் மூன்று "சுவாமி" களுக்கு ஸ்காபுறோ ஐயப்பன் தேவஸ்த்தானத்தில் கௌரவம்



ஐயப்பன் அடியவர்களாக. கடந்த 18 ஆண்டுகளாக தொடர்ச்சியாக சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்கு புனித பயணம் மேற்கொண்டு வரும் கனடா வாழ் மூன்று “சுவாமி“ களுக்கு ஸ்காபுறோ ஐயப்பன் தேவஸ்த்தானத்தில் நடைபெற்ற விசேட வைபவத்தில் கௌரவம் செய்யப்பெற்றது.

26-12-2023 அன்று நடைபெற்ற மேற்படி விசேட வைபவத்தில் வணக்கத்திற்குரிய “குருசாமி“ சுப்பிரமணியம் அவர்கள் “சுவாமிகள்“ வல்லிபுரம் ரகு. வேலுப்பிள்ளை ரட்ணசிங்கம். மற்றும் பூபதிப்பிள்ளை ஜெயநாதன் ஆகியோர் பொன்னாடைகள் போர்த்தப்பெற்று கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.

# கொடூரமான குற்றங்களில் ஈடுபட்ட நபர்களுடனான சமீபத்திய சந்திப்பு தமிழ் சமூகத்தை ஏமாற்றும் ஒரு விடயமாகும்

## ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி கோரிக்கை



கொடூரமான குற்றங்களில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசின் நபர்களுடனான சமீபத்திய சந்திப்பு தமிழ் சமூகத்தை ஏமாற்றும் மற்றும் ஆழமாக காயப்படுத்திய ஒரு வேதனையான விடயமாகும். எனவே. கனடியத் தமிழர் பேரவை **(CTC)** குளோபல் தமிழ் மன்றம் மற்றும் இந்தப் பிரதிநிதிகள் குழுவில் பங்குபெற்ற அனைவரும் தமிழ்ச் சமூகத்திடமும் புலம்பெயர் தமிழர்களிடமும் உறுதியானதும், தெளிவானதுமான மன்னிப்பைக் கோர வேண்டும்.

(உள்ளே செய்தி 18ம் பக்கத்தில்)

# சென்னை TAMIZHAGAM INTERNATIONAL FILM FESTIVAL INDIA குழு, கனடா " தமிழன் வழிகாட்டி " செந்திலாதனின் " செந்தீ " குறும்படத்திற்கு வழங்கிய விருது



சென்னை **TAMIZHAGAM INTERNATIONAL FILM FESTIVAL INDIA** என்னும் குழு கனடா வாழ் " தமிழன் வழிகாட்டி " செந்திலாதன் வழங்கிய " செந்தீ " குறும்படத்திற்கு 24 -12 -2023 அன்று சென்னையில் விருது வழங்கி கௌரவித்துள்ளது.

இந்த கௌரவமானது. ஈழத்து கலைஞர்களுக்கு கிடைத்த மற்றுமோர் அங்கீகாரமாக கருதலாம் என கனடா வாழ் கலா ரசிகர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.“செந்தீ குறும்படத்தினை **Tamilsguide Senthi** யூட்டியூப் ***(Youtube)*** தளத்தில் பார்வையிடலாம்.

# இவரே உண்மையான ‘கேப்டன்’!

## சென்னையிலிருந்து சிவா பரமேஸ்வரன்



திறமையாக வழிநடத்துபவர்களையே ‘கேப்டன்’ என்று அழைப்பது வழக்கம். அந்த சொற்றொடர் பெரும்பாலும் விளையாட்டு அணிகளுக்கு தலைமை ஏற்பவர்களுடன் தொடர்புகொண்டது. ஏனென்றால் அவர் ஒரு அணியை வழிநடத்திச் சென்று வெற்றிப்பாதையில் செலுத்தி தளராமல் உறுதியாகக் கடைசிவரை நிற்க வேண்டும். வெற்றி தோல்விகளைக் கண்டு தளராமல் இருப்பவரே ‘கேப்டன்’ என்ற அடைமொழிக்குப் பொருத்தமானவர்.

அப்படி இருந்தார் விஜயகாந்த். அதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. மென்மையானவர் ஆனால் உறுதியானவர். எளிமையான பின்புலத்திலிருந்து திரைத்துறைக்கு வந்தவர். அவர் யாருக்கும் போட்டியாக திரைத்துறைக்கு வரவில்லை.

(உள்ளே செய்தி 15ம் பக்கத்தில்)

# Mental Health Peer Leaders என்னும் கனடிய அரசின் திட்டத்தின் கீழ் மார்க்கம் தமிழர் அமைப்பு நடத்திய பயிற்சி நெறி



**Mental Health Peer Leaders** என்னும் கனடிய மத்திய அரசாங்கத்தின் திட்டத்தின் பிரகாரம் மார்க்கம் தமிழர் அமைப்பு நடத்திய பயிற்சி நெறியில் பங்கு பற்றியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மார்க்கம் சனசமூக நிலைய அறை 8 இல் சிறப்பாக நடைபெற்றது. இந்த **Mental Health Peer Leaders** என்னும் நோக்கமானது, ஒவ்வொரு இனக்குழுமத்தின் மத்தியில் தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் உளவளத்தை பேணும் வகையில் தலைமை தாங்கக் கூடிய தலைமைத்துவப் பண்பு கொண்டவர்களை உருவாக்குதல் என்பது குறிப்பிடத்தக்கது. மார்க்கம் தமிழர் அமைப்பின் தலைவர் திரு கிள்ளி செல்லையா நிகழ்வுக்கு தலைமை தாங்கினார். தகைமை பெற்றவரான சதா விவேகானந்தன் அவர்களால் பயிற்சியளிக்கப்பெற்ற சுமார் 30 பயிற்சியாளர்கள் அங்கு கௌரவிக்கப்பெற்றனர்.

சிறப்புப் பேச்சாளர்களாக மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார உறுப்பினர் யுனைற்றா நாதன்., கலாநிதி பார்வதி கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டு பயனுள்ள உரைகளை ஆற்றினர். திருமதி சுமி பிரபாவும் அங்கு உரையாற்றினார்.